# வலம்புரி

Valampurii

பக்கங்கள்:- பதினான்கு

சங்கு 06 வள்ளுவர் ஆண்டு 2036 பங்குனி 11 வியாழக்கிழமை (24.03.2005) தொலைபேசி 2223378, 2227644 ஒலி 95



RAMCO CEMENT

கோ

சீமெந்து


# ஐ.தே.கவின் தீர்மானங்களை எதிர்ப்பதற்கு ஜே.வி.பி. முடிவு

## அதன் தலைவர் சோமவன்ஸ தெரிவிப்பு

(நமது நிருபர்)

ஐக்கிய தேசியக் கட்சியினால் முன்வைக்கப்படும் அனைத்துத் தீர்மானங்களையும் ஜே.வி.பி. ஒருபோதும் ஆதரிக்கமாட்டாது.

இந் நிலைப்பாட்டில் இருந்து எமது கட்சி எவ்வகையிலும் பின்வாங்க மாட்டாது என ஜே.வி.பியின் தலைவர் சோமவன்ஸ அமரசிங்க தெரிவித்துள்ளார். (14 ஆம் பக்கம் பார்க்க)

## பருத்தித்துறையில் 28 ஆம் திகதி மாபெரும் ஆர்ப்பாட்டப் பேரணி

அரசினால் இடைநிறுத்தப்பட்டிருக்கும் பேச்சினை உடன் ஆரம்பிக்குமாறு கோரியும் இராணுவம் பொதுமக்கள் மீது மேற்கொள்ளும் அடாவடித்தனங்களைக் கண்டித்தும், சுனாமியால் பாதிக்கப்பட்ட கரையோரப் பகுதியிலுள்ள ஓர வான்களை துப்புரவு செய்யும்போது இராணுவத்தினரால் மேற்கொள்ளப்படும் இடைஞ்சல்களை தவிர்க்கக் கோரியும், நிர்ணயிக்கப்பட்ட கரையோரக் குடியிருப்புகளின் அமைவிடத் தூரம் மற்றும் உயர் பாதுகாப்பு வலயப் பகுதியில் குடியேற அனுமதி மறுக்கப்பட்டமை, இராணுவ கனரக வாகனங்களால் ஏற்படும் (14 ஆம் பக்கம் பார்க்க)

## இராணுவக் கட்டுப்பாட்டுப் பகுதிகளில் தமிழரின் இயல்பு வாழ்க்கை பாதிப்பு

### சுவிஸ் சந்திப்பில் சு.ப. தமிழ்ச்செல்வன்

(பேர்ன்)

பொதுமக்களின் இயல்பு வாழ்க்கை, சட்டம் என்பன விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதியில் ஒழுங்காகப் பேணப்படுகின்றது. ஆனால் தமிழீழத் தாயகத்தில் இராணுவ ஆக்கிரமிப்புப் பகுதியில் இது பிரச்சினைக்குரியதாக இருக்கின்றது என தமிழீழ அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப. தமிழ்ச்செல்வன் தெரிவித்துள்ளார்.

சுவிற்சர்லாந்தின் வெளிவிவகாரத் தூதுவர் தோமஸ் கிறிஸ்மிங்கர் தலைமையிலான உயர்மட்டக் குழுவுடன் நேற்று முன்தினம் நடைபெற்ற சந்திப்பின்போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

ஆழிப்பேரலையின் பின்னான சமாதான முன்னெடுப்புக்கள், புனர்நிர்மாண மீள்குடியமர்வு, அபிவிருத்திக்கான முன்மொழியப்பட்ட இணைந்த பொறிமுறையின் தற்போதைய நிலைமை குறித்து சந்திப்பின்போது சு.ப. தமிழ்ச்செல்வன் விவரித்துள்ளார்.

அரசியல் குறிக்கோளுடன் விடுதலைப் புலிகள் இயங்கி வருகின்றபோதும் தற்போதைய சூழலில் நோர்வே சமாதான முன்னெடுப்பாளரின் ஆலோசனைப்படி விட்டுக்கொடுப்புக்களை மேற்கொண்டுள்ளோம்.



நாம் பொறுப்புடன் செயற்பட்டு நோர்வேயின் செயற்பாட்டை, தீர்மானத்தை ஏற்றுக் கொண்டுள்ளோம் என்றார்.

யாழ். குடாநாட்டில் போரினால் இடம்பெயர்ந்த ஒரு பகுதி மக்கள் சமாதான காலப் பகுதியில் உயர்பாதுகாப்பு வலயத்தினுள் மீள்குடியமர அனுமதிக்கப்படவில்லை. (14 ஆம் பக்கம் பார்க்க)

## பொலிஸ் சூட்டில் இளைஞன் படுகாயம்

(அம்பாறை)

அம்பாறை மாவட்டம் அக்கரைப்பற்றிலுள்ள பொலிஸ் சோதனைச் சாவடியொன்றில் நேற்று மாலை பொலிஸார் மேற்கொண்ட துப்பாக்கிப் பிரயோகத்தில் முஸ்லிம் இளைஞரொருவர் காயமடைந்து வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

நிந்தவூரைச் சேர்ந்த ஆதம்பாவா மொகமது அலி (வயது 28) என்ற இளைஞரே இந்த (14 ஆம் பக்கம் பார்க்க)

## இலங்கையில் ஐ.நா.பிரதிநிதி

(கொழும்பு)

ஐக்கிய நாடுகளின் சபையின் சிறப்பு பிரதிநிதி எஸ்கின் போலெஸ் இலங்கை வந்துள்ளார்.

ஐ.நா. சபையின் ஆழிப்பேரலையால் பாதிக்கப்பட்ட நாடுகளுக்கான சிறப்பு பிரதிநிதியாக (14 ஆம் பக்கம் பார்க்க)

## விவசாயக் காணிக்கு பதில் காணி வழங்கல் குறித்து அறிக்கை சமர்பிக்க உத்தரவு

### யாழ். அரச அதிபரை ஒத்துழைப்பு வழங்குமாறும் பணிப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத்தில் அதியுயர் பாதுகாப்பு வலயமாக பிரகடனப் படுத்தப்பட்டுள்ள பகுதிகளிலுள்ள விவசாயக் காணிகளுக்கு பதிலாக வேறு இடங்களை வழங்குவது குறித்து, அறிக்கை சமர்ப்பிக்குமாறு அரசிற்கு உயர் நீதி மன்றம் உத்தரவிட்டுள்ளது.

இந் நடவடிக்கைக்கு ஒத்துழைப்பு வழங்குமாறு யாழ்ப்பாண மாவட்ட அரச அதிபரை உயர் நீதிமன்றம் பணித்துள்ளது.

யாழ். மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் மாவை சேனாதிராசா உட்பட அவர் தாக்கல் செய்திருந்த அடிப்படை உரிமை மீறல் மனுவை பரிசீலினை செய்த பின்னரே உயர்நீதிமன்றம் இவ் உத்தரவை பிறப்பித்துள்ளது. (14 ஆம் பக்கம் பார்க்க)

## இராணுவம் - மக்களுக்கிடையே வவுனியாவில் நேற்று முறுகல்

வவுனியா சாத்திரிகூழாங்குளம் பகுதியில் இராணுவத்தினருக்கும் மக்களுக்கும் இடையில் நேற்று காலை முறுகல் நிலை ஏற்பட்டது. போர் நிறுத்த கண்காணிப்பு குழுவினரின் தலையீட்டின் பின்னர் நிலைமை கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரப்பட்டுள்ளது.

காலை 9 மணியளவில் ஈச்சங்குளம் பகுதியில் இருந்து வவுனியா நோக்கி துவிச்சக்கரவண்டியில் சென்றுகொண்டிருந்த கரன் (வயது 25) என்பவர் அதே திசையில் வீதி ரோந்து நடவடிக்கையில் ஈடுபட்டிருந்த இராணுவத்தினரின் துவிச்சக்கரவண்டியுடன் தவறுதலாக மோதியுள்ளார். (14 ஆம் பக்கம் பார்க்க)

## மார்க்க அறிஞர் நாடு கடத்தல் கண்டித்து முஸ்லிம்கள் ஆர்ப்பாட்டம்

(மட்டக்களப்பு)

தென்னிந்தியாவைச் சேர்ந்த இஸ்லாமிய மார்க்க அறிஞர் பீ.ஜெயினுலாப்தீன் நாடுகடத்தப்பட்டமைக்கு எதிர்ப்புத் தெரிவித்து நேற்று மட்டக்களப்பு காத்தான்குடி பிரதேச முஸ்லிம்கள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

இலங்கையில் கடந்த இரு வாரகாலமாக தங்கியிருந்த இஸ்லாமிய மார்க்க அறிஞரான மௌலவி பீ.ஜெயினுலாப்தீன் நேற்று அதிகாலை குடிவரவு குடியகல்வு திணைக்கள அதிகாரிகளினால் நாடுகடத்தப்பட்டார்.

நேற்று முன்தினம் மாலை கொழும்பு மருதானை எல்பின்ஸ்டன் மண்டபத்தில் மார்க்கப் பிரசார நடவடிக்கைகளில் (14 ஆம் பக்கம் பார்க்க)

## பொதுக்கட்டமைப்பில் புலிகளை இணைக்கக் கூடாது - ஹெல உறுமய

(கொழும்பு)

பொதுக்கட்டமைப்புத் தொடர்பில் பாராளுமன்றத்தில் விளக்கம் அளிக்கப்பட வேண்டுமென ஜாதிக ஹெல உறுமயவின் பாராளுமன்ற உறுப்பினர் அத்துருசிய ரத்னதேரர் வேண்டுகோள் விடுத்தார்.

பொதுக்கட்டமைப்பினுள் தமிழீழ விடுதலைப் புலிகளையும் இணைத்துக்கொண்டால் இது பயங்கரவாதத்தின் கீழ் பொது மக்களை கொண்டுவரும் நடவடிக்கையாக அமைந்துவிடும்.

விடுதலைப் புலிகள் அமைப்பு ஒரு பயங்கரவாத அமைப்பாகும். அதனை நாட்டிற்குள் வைத்திருப்பதே தவறாகும். அப்படியிருந்தும் விடுதலைப் புலிகளை அரசாங்கம் (14 ஆம் பக்கம் பார்க்க)


EXPOAIR

யாழ் கொழும்பு

தினசரி விமான சேவை

எக்ஸ்போ ஏயார்

T.P: 021 222 3891 / 6297, 0772 348888, 0772 349999

Your friend in the skies... E-Mail: jaffna @ expoavi.com, reservations @ expoavi. com,

வானத்தில் உங்கள் நண்பன்...

# இணுவில் சிவகாமி அம்மன் கோயில்

# இரதோற்சவ சிறப்பு மலர் – 24.03.2005



## மஹோற்சவ குருவின் ஆசிச் செய்தி

ஈழமணித் திருநாட்டில் பல சிறப்புமிக்க ஆலயங்கள் நிறைந்து விளங்கும் இணுவில் திருப்பதியில் அருள்மிகு சிவகாமி அம்மன் திருக்கோயில் வரலாற்றுப் பெருமை வாய்ந்த ஒரு திருத்தலமாகும். இவ் ஆலயத்தில் பெருமைமிக்க விழாக்களாக நவராத்திரி விழாவில் மகிஷாசுரமர்த்தனியாக அம்பாள் எழுந்தருளி மகிஷாசுரசம்காரம் செய்யும் காட்சியும் – வருஷந்தோறும் உத்தராயண புண்ய காலத்தில் பங்குனி மாத உத்தர நட்சத்திரத்தினை அந்தமாகக் கொண்டு முதல் 12 நாட்கள் நடைபெறும் பிரம்மேற்சவம் எனப்படுகின்ற மஹோற்சவமும் மிகச் சிறப்புப் பொருந்தியனவாகும். மஹோற்சவமானது இறைவனின் பஞ்ச கிருத்தியங்களான படைத்தல் – காத்தல் – அழித்தல் – மறைத்தல் – அருளல் எனப்படும் ஐந்தொழில்களையும் சுட்டி நிற்கின்றது. அவற்றுள் தேர்த் திருவிழாவான ரதோற்சவம் அழித்தலைக் குறிக்கின்றது. தொன்மையான எழுதாமறையான வேதங்களை சக்கரங்களாகவும் திசைமுகனான நான்முகன் பிரம்மாவை சாரதியாகக் கொண்ட திருத்தேரில் அன்னை சிவகாமி அம்மன் ஆரோகணித்து எமது மலங்களை அழித்து அருள்புரியும் தேர்த் திருவிழா சிறப்புற எனது மனமார்ந்த ஆசிகளை அருள்கின்றேன்.

அன்னை சிவகாமி அம்மன் அருளால் அவள் குழந்தைகளான அனைத்து ஜீவான்மாக்களும் சகல சௌபாக்கியங்களுடன் பல்லாண்டுகாலம் சிறப்புற வாழவும் இடருற்றிருக்கும் எமது தேசம் அன்னையின் அருளால் இடர்நீங்கி சாந்தி, சமாதானம், சௌபாக்கியம் பெறவும் நல்லாசிகள் கூறி வாழ்த்துகின்றேன்.

மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்.

ஓம் சாந்தி! சாந்தி! சாந்தி!

**பிரம்மஸ்ரீ சாம்பசிவ குமாரசாமி குருக்கள்**
(ஈசான சிவாச்சார்யர்)
மஹோற்சவ குரு அருள்மிகு சிவகாமி அம்மன் கோயில், இணுவில், சுன்னாகம்.



24.03.2005 வியாழன் தேர்
வசந்தமண்டப் பூஜை –
காலை 7 மணி

தாசன் ஸ்ரூடியோ
உள்புற, வெளிப்புற படப்பிடிப்பாளர்
கே.கே.எஸ். வீதி இணுவில்
T.P: 021 -222-7724, 077 -6682026, 077 - 6636733

நாதன் சகோதரர்கள்
கே.கே.எஸ்.வீதி, இணுவில்

College of Computer
கணினியியல் கல்லூரி
Institute of Computer Studies Inuvil
K.K.S Road, Inuvil.
No: 88 Palaly Road, Thirunelvely.
T.P: 222 7643
E.Mail: coc_inuvil@yahoo.com

அம்பிகையே தேரேறி வாருமம்மா!
FASHION HOUSE பெஷன் ஹவுஸ்
65, K.K.S ROAD, JAFFNA, PHONE: 2197


### கேட்ட வரங்களை வாரிவழங்கும்

# கலட்டியம்பதி ஸ்ரீ வரசித்தி விநாயகர்

## (புங்குடுதீவு கிழக்கு ஸ்ரீ வரசித்தி விநாயகர்)

# தேர்த்திருவிழா சிறப்பு மலர் – 24.03.2005





புங்குடுதீவு கலட்டிப் பிள்ளையார் என்னும் ஸ்ரீ வரசித்தி விநாயகர் ஆலயம் அண்மையில் சிறப்பாக மகாகும்பாபிஷேகம் நடைபெற்று தற்போது கடந்த 16.03.2005 அன்று புதன் கிழமை கொடியேற்ற விழாவுடன் மகோற்சவம் ஆரம்பமாகியுள்ளது. பல வருடங்களுக்கு பின்னர் மறுமலர்ச்சியுடன் வெகுசிறப்பாக, ,

ஆலய பரம்பரை குருவாகிய அமரர் பஞ்சாட்சரக்குருக்கள் (மஞ்சந்த ஐயா) அவர்களின் புத்திரனும் ஆலயப் பிரதம குருவும், மகோற்சவ சிவாச்சாரியாருமாகிய 'சிவாச்சாரிய கலாநிதி சிவாச்சாரிய குலபூஷணம்' கனேடிய திருமணப் பதிவாளர் சிவஸ்ரீ பஞ்சாட்சர விஜயகுமாரக்குருக்கள் (ஐயாமணி சிவம்) அவர்கள் தலைமையில் மிகவும் சிறப்பாக நடைபெற்று வருகின்றது.

ஆதியில் யாழ்ப்பாணம் அரியாலைப்பகுதியில் வசித்து வந்த ஒரு மூதாட்டியால் அனுதினமும் வழிபட்டுவந்த விநாயகப்பெருமான், அந்த மூதாட்டி புங்குடுதீவிற்கு வந்ததும் அவரின் வேண்டுகோளுக்கு செவிசாய்த்து 'கலட்டியம்பதியில்' சோதிவடிவாக தோன்றி காட்சி கொடுத்தார்.

அந்தஇடத்தில் திடீரென அதிசயமாக ஒரு கொன்றை மரம் தோன்றி அன்றுமுதல் இன்றுவரை ஸ்தல விருட்சமாக விளங்குகின்றது. அந்த மரத்தில் கொத்துக்கொத்தாக திருக்கொன்றம் பூக்கள் பூத்துக் குலுங்கினாலும் அதில் காய்கள் உண்டாவதில்லை. இதுவும் பிள்ளையாரின் அதிசயம் என்று மக்கள் பேசிக்கொள்கின்றனர்.

பலவருடங்களின் பின்னர் பிரபல வர்த்தகரும் தருமசீலருமான பொறளை நாகலிங்கம் அவர்கள் இக்கோயிலைத் திருப்பணி செய்வித்து கும்பாபிஷேகம் செய்து அதற்கு நித்தியபூசைக்குரிய வழிபாடுகளையும் ஏற்பாடு செய்தார்.

பின்னர் அவரது வழித்தோன்றல்கள் பரிபாலனம்செய்து தற்போது பரம்பரையாக பூசைசெய்து வந்தவர்களான பஞ்சாட்சர விஜயகுமாரக் குருக்களிடம் பரிபாலனப் பொறுப்பு ஒப்படைத்த பின்பு மிக சிறப்பாக நித்திய பூசைகளும் வெள்ளிக்கிழமைதோறும் அன்னதானமும் சதுர்த்தி விழாக்களும் நடைபெற்றுவருவது புலம்பெயர்ந்து வெளிநாடுகளில் வாழும் வரசித்தி விநாயகப்பெருமானின் அடியார்களின் மனதில் பெருமகிழ்வைத் தருகின்றது.

கொழும்புவாழ் புங்குடுதீவு வர்த்தகப்பெருமக்கள் அனைத்துலகங்களில் வாழும் வரசித்திவிநாயகப் பெருமானின் அடியார்கள் அனைவரும் பேராதரவு வழங்கிவருகின்றமையால் ஆலயம் மறுமலர்ச்சி பெற்றுள்ளது.

தற்போது நடைபெற்றுவரும் மகோற்சவத்தின் சிறப்பு விழாவாகிய தேர்த்திருவிழா இன்று நடைபெறுகிறது. புதிய சித்திரத்தேரின் நிர்மாணப்பணிகள் தேர்த்திருவிழாவாகிய இன்று ஆலய மணிமண்டபத்தில் ஆரம்பமாகவுள்ளது.

சமயக்குரவர்கள் நால்வரின் மடம் சீர்திருத்த பணிகள் பூர்த்தியாகி மீண்டும் நித்திய பூசைகள் ஆரம்பமாகியுள்ளது. நாளை வெள்ளிக்கிழமை பங்குனி உத்தர நட்சத்திரத்தில் வழமைபோல கண்ணகி அம்மன் ஆலய சமுத்திரத் தீர்த்தக்கேணியில் சமுத்திரத்தீர்த்தம் நடைபெறும்.

சனிக்கிழமை இரவு ஆலயத் தொண்டர்களின் இளைஞர்களால் பூங்காவனத்திருவிழாவும் நிகழவுள்ளது. ஸ்ரீ வரசித்தி ஆலயத்தின் பெருவிழாவை அனைத்துலக இந்துக் குருபீடத்தின் அவுஸ்ரேலியப் பிரதிநிதி டாக்டர் சோமாஸ்கந்தக்குருக்கள் தென்னிந்தியப் பிள்ளையார் பட்டிசர்வசாதகப் பூஷணம் டாக்டர் சிவஸ்ரீ பிச்சைக்குருக்கள் ஆகியோருடன் திருக்கேதீஸ்வர பிரதமகுரு சிவஸ்ரீ பாலசுப்பிரமணியக்குருக்கள் ஆகியோர் நல்லாசி வழங்கி மகோற்சவத்தை ஆரம்பித்துவைத்தனர் என்பது குறிப்பிடத்தக்கது.

கேட்ட வரங்களை வாரிவழங்கும் ஸ்ரீவரசித்தி விநாயகப்பெருமானின் தேர்த்திருவிழாவை கண்டுகளிக்க அனைவரும் திரண்டு வாரீர்.


**– நிர்வாகம்**


# கொக்குவில் மேற்கு, மணியர்பதி

## அருள்மிகு வள்ளி தேவசேனா சமேத ஸ்ரீ சிவசுப்பிரமணியசுவாமி

## இரதோற்சவ சிறப்பிதழ் 24.03.2005







**காலை 10.00மணி**

### மஹோற்சவ குருவின் ஆசிச்செய்தி



இலங்கையின் வடபால் யாழ்ப்பாணத்தில் கொக்குவில் மேற்கு மணியர் பதியில் கோயில் கொண்டிருக்கும் கலியுகவரதனாகிய முருகப் பெ ருமான் அடியார்கட்கு வேண்டிய வரங்களை வாரி வழங்கி அவர்களின் துன் ப துயரங்களை நீக்கி அருளுகின்றார். முருகப்பெருமானுக்கு ஒவ்வொரு வருடமும் வரும் பங்குனி பௌர்ணமி தினத்திற்கு முதல் நாள் இர தோற்சவமும் மறுநாள் தீர்த் தோற்சவமும் நடைபெறு வது வழக்கமாகும்.

இவ்வருடமும் மஹோற்சவம் இறையருளினால் வெகு சிறப்பாக நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. அடியார் கூட்டமும் நாதஸ்வர தவில் கச்சேரிகளும் அரோகரா கோசங்களும் முழங்க சண்முகப்பெருமான் அழகிய சித்திரத் தேரில் வீதி வலம் வரும் காட்சி கண்கொள்ளாக் காட்சியாக இருக்கிறது. இன்றைய தினத்திலே ஆலய பரிபாலன சபையினருக்கும், மஹோற்சவ உபயகாரர்களுக்கும், இந்து இளைஞர் மன்றத்தினருக்கும், முருகன் அடியார்களுக்கும், இலங்கை வாழ் மக்களுக்கும் மஹோற்சவ குருவாக இருக்கின்ற நான் எனது மன ப்பூர்வமான ஆசிகளை வழங்குவதோடு முருகப்பெருமானின் திருவருள் என்றும் அடியவர்களுக்குக் கிடைக்கவேண்டிப் பிரார்த்திக்கின்றேன்.

சிவஸ்ரீ வேதாகம கிரியாபானு
ந. உருத்திரமூர்த்தி குருக்கள்
(பிரதமகுரு இணுவில் கந்தசுவாமி கோயில்)

### பொருளாளரின் ஆசிச்செய்தி

கொக்குவில் மேற்கில் மணியர்பதி ஸ்ரீ சிவசுப்பிர மணிய தேவஸ்தானம் என்று அழைக்கப்படும் எங் கள் ஆலயம் ஆரம்பத்தில் மணியர்காடு முருகன் கோயில் என்று அழைக்கப்பட்டு வந்தது. அப்போது சிறிய ஆலயமாக இருந்தும் முருகன் அருள் பெரிதாக இருந்தமையால் முருகன் அடியார்களின் முயற்சியால் சகல மூர்த்திகளும் அமைந்துள்ள ஓர் சிறந்த ஆலயமாக அமையப்பெற்றது ஒரு சிறப்பம்சமாகும். ஆரம்பத்தில் அலங்கார உற்சவம் 10 நாட்கள் வெகு சிறப்பாக நடைபெற்று வந்தபோதும் அடியார் களின் நீண்ட நாள் ஆசையான மஹோற்சவத்தை



நடாத்து வதை முருகன் அறிந்து அதற்கேற்ப மஹோற்சவங்கள் நடைபெறுவதற்கான வசதிகளை அடியார் களுக்கு வழங் கி சித் திரத் தேர் கூட எமது ஆலயத் திற்கு அமைந்திருப்பது ஓர் வரப்பிரசாதமாகும்.

இச்சித்திரத்தேர் திருவிழா இன்று 24.3.2005 நடைபெறவிருக்கின்றது. அத்திருவிழா சிறப்புறவும் தொடர்ந்து வரும் திருவிழாக்களும் சிறப்பாக நடை பெற மணியர்பதி முருகனை வேண்டி அடியார்கள் யாவரும் இவ்விழாவில் கலந்து சிறப்புறச் செய்து முரு கனின் அருளைப் பெறுவதோடு மேலும் எங்கள் அடி யார்களின் ஒற்றுமையால் எமது ஆலயம் மேலும் சிறப் புற வளர்ந்து திருவிழாக்கள் சிறப்பாக நடைபெற முருகனின் ஆசிகளை வேண்டுகிறேன்.

சி. அன்னலிங்கம்
(பொருளாளர்)

### கொக்குவில் மேற்கு மணியர்பதி ஸ்ரீ சிவசுப்பிரமணிய தேவஸ்தான ஆலய வரலாறு

1835ஆம் ஆண்டளவில் கொக்குவில் மேற்கை வசிப்பிடமாகக் கொண்டு வாழ்ந்து வந்த சைவப் பெரியார் சன்னாசியார் அவர்களினால் அருவுருவமாகிய எம்பெருமானை ஓர் இடத்தில் வைத்து வணங்கி வந்தார்கள். நாளொரு வண்ணம் வளர்ந்து வந்த பக்தியினால் அங்கே வேல் வைத்து வணங்கினார்கள். அப்பொழுது ஆலயம் ஒரு சிறிய கொட்டிலாக இருந்ததாக அறிகிறோம். கொக்குவில் மேற்கில் வசித்து வந்த அடியார்கள் 1930 ஆம் ஆண்டு ஒரு ஆலயம் கட்டி கும்பாபிஷேகம் செய்தார்கள். அப்பொழுது மூலஸ்தானத்தில் வேலும் பரிவாரத்தெய்வங்களாக விநாயகர், சந்தான கோபாலர், வைரவர் அமைக்கப்பட்டிருந்தது.

1978ஆம் ஆண்டு ஆலயம்புதுப்பிக்கப்பட்டு மூலஸ்தானம் பொளிக்கல்லால் அமைக்கப்பட்டு கும்பாபிஷேகம் செய்யப்பட்டது.

பின்னர் 1991ஆம் ஆண்டு மூலஸ்தானம் முன் மண்டபம் மூடுசாந்து கட்டடம் அமைக்கப்பட்டு பரிவார மூர்த்திகளாக லக்சுமியும் நடராஜப்பெருமானும் வைக்கப்பட்டு அத்துடன் வ்சந்தமண்டபம், யாகசாலை, முத்துக் குமாரசுவாமி, ஆறுமுகசுவாமி, பலிபீடம், மடப்பள்ளி, வாகனசாலை என்பன புதிதாகக் கட்டப் பட்டு கும்பாபிஷேகம் நடைபெற்றது.

1956ஆம் ஆண்டு கண்டாமணி அமைக்கப்பட்டது.

1984ஆம் ஆண்டு தேர், தேர் மண்டபம் அமைக்கப்பட்டது.

1982ஆம் ஆண்டு மஹோற்சவம் ஆரம்பமாகியது.

1925ஆம் ஆண்டு முத்துக்குமாரசுவாமி பிரதிஷ்டை செய்யப்பட்டது.

1960ஆம் ஆண்டு மூலமூர்த்தி பிரதிஷ்டைசெய்யப்பட்டது.

1980ஆம் ஆண்டு ஆறுமுகசுவாமி பிரதிஷ்டை செய்யப்பட்டது.

### கொக்குவில் மேற்கு மணியர்பதியில் தேர் ஏறிவரும் சண்முகப்பெருமான்



கொக்குவில் மக்களின் குல தெய்வமாகிய சண்முகப் பெருமான் தேரில் ஏறிவந்து சகல மக்களுக்கும் அருள் பொழிந்து காட்சி தருகின்றார். சண்முகப் பெருமான் அலங்கார காட்சியுடன் தேர் ஏறிவந்து மக்களின் துயர் துடைத்து அபிலாஷைகளை நிறைவு செய்து அருள்பாலிப்பானாக. 15 தினங்களும் எம்பெருமானின் அலங்காரக் காட்சியை காணும் அடியார்கள் கூட்டம் பக்தியின்பால் மெய்சிலிர்த்து இறைவனோடு இரண்டறக் கலந்துகொள்கின்றனர். இறை அருள் வேண்டி நிற்பவர்களுக்கு நல்லாசிகள் கொடுத்து அருள் புரிவானாக.

பொன். முத்துக்குமாரு
(தலைவர்)


### ஆறுமுகப்பெருமான் ஆனந்தத்திற்கு வழிகாட்டுகின்றான்

கொக்குவில் மேற்கு மணியர் பதியில் கோயில் கொண்டு வீற்றிருந்து அருளாட்சி புரியும் முருகப் பெ ருமான் இப்பகுதி மக்களின் குல தெய்வம்; கண்கண்ட தெய்வம்; நம்பிக்கைத் தெய்வம். அனவரதமும் அவனை அன்போடு வழிபடுவோரின் காரியங்கள் யாவும் கைகூடி ஆனந்தம் நிலவுவது மணியார் பதிவாழ் மக்களின் நேரடி அனுபவமாக உள்ளது. ஆண்டுதோறும் பங்குனி மாதத்தில் 15 நாட்கள் ஆண்டுப் பெருவிழா நடைபெறுகின்றது. அந்நாட்களில் வீதியெல்லாம் விழாக்கோலம் கொண்டிருக்கும். ஊரெல்லாம் பக்தி மணங்கமழும். இல்லமெல்லாம் இன்பம் நிறைந்திருக்கும். இன்று ஆறுமுகப் பெருமான் அலங்கார ரூபனாக தேரேறி வீதியுலா வருகின்றான். அவனைக் கண்ணாரக்கண்டு என்புருகி நின்று கரங்களில் வடம்பிடித்து ஆனந்த மழையில் மூழ்கித் திளைப்போமாக.



இ. ஸ்ரீகாந்தன்
(செயலாளர்)

ஆலய நித்தியகுரு - சீ.சதீஸ்குமார சர்மா




**நந்தலாலா இரும்பகம்**
29,ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்
எம்மிடம் சகலவிதமான இரும்புப்பொருட்கள், தகரம், பெயின்ற், கட்டிடப்பொருட்கள், அலகுகள், துளைகருவி போன்றவற்றைப் பெற்றுக்கொள்ளலாம்.

**மகாநதி ஜுவல்லறி**
MAKANATHY JEWLLERY
Kasthuriyar Road, Jaffna. 72A கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.



**YARLTON Multi centre**
யாழ்ரன் மல்ரி சென்ரர்
Tel: 021 2226330
No: 48, Kasthuriyar Road, Jaffna.
இல:48, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

Tel:021 2226807
Mob:0777-567785
Karan (proprietor)
**Karan Electronics**
கரன் எலக்ரோனிக்ஸ்
T.V, Deck, Radio, Wall clock, Wrist Watch, Gift Items.
No: 68, Kasthuriyar Road, Jaffna.

# தனியார் கல்வி நிறுவனங்கள்

பாடசாலையில் கல்வி கற்கும் மாணவர்கள் பாடசாலைக்கு ஒழுங்காகச் சென்று பாடங்களை கற்று பரீட்சையிற் சித்தி பெற்றுச் சிறப்புற்ற காலம் பல ஆண்டுகட்கு முன்பிருந்தது. அன்றைய பாடசாலைக் கல்வி ஆசிரியமாணவர்களின் ஒழுங்கமைப்பிலும், கற்றல், கற்பித்தலிலும், உண்மையான கடமை உணர்வுடன் ஊருக்குவழிகாட்டிகளாக அமைந்தன.

ஒரு பாடசாலையில் மாணவன் சேர்க்கப்பட்டால் அப்பாட சாலை ஆசிரியர்களே பாடசாலை முடியும் வரை மாணவனுககுப் பொறுப்புடையவராக செயற்பட்டதும், பெற்றோர் அவ்வித நம்பிக்கையில் இருந்ததும ஒரு காலமாயிருந்தது.

யும் என்ற திடமான நிலைப்பாட்டிற் பெற்றோரும், மாணவரும் இயங்குகின்றனர். இதனால் பாடசாலைக்கு மாணவர் ஒழுங்காகச் சமுகமளிக்காமலே பரீட்சையிற் சித்தியடையும் வாய்ப்

**தனியார் கல்வி நிறுவனங்கள் மாணவரின் கல்வியை சீர்படுத்துகின்றனவா? சீரழிக்கின்றனவா? என்ற விவாத அரங்கிற்கு, சீர்படுத்துகின்றன எனத் தமது வாதங்களை முன்வைக்கின்றனர் நீர்வை தியாகமணி மற்றும் சுகந்தினி முருகேசு அச்சுவேலி தெற்கு ஆகியோர்.**

பினைத் தனியார் கல்வி நிறுவனங்கள் செயற்படுத்துகின்றன. இந்த விதத்திலே வளர்ந்து

படுத்தி தம்மை வளர்த்துக் கொள்வதற்காகவும் கற்பித்தலில் அக்கறைகாட்டுகின்றன.

பாடசாலை, பாடசாலைக் கல்வி, ஆசிரியத்துவத்தின்

தனித்துவம் என்பன சரியான முறையில் அமையும் வரிசையிற் தனியார் கல்வி நிறுவனங்

டன் அயராது செயற்பட்டுவருவது நாமெல்லாம் அறிந்த பேருண்மையாகும்.

தனியார் கல்வி நிறுவனங்களில் நடக்கும் போட்டிப்பரீட்சைகள், பாடரீதியான மீட்டல் பரீட்சைகள் என்பன பல்வேறு பாடசாலைகளிலிருந்தும் வருகின்ற பல்வேறு தரமான நுண்மதித்திறன் கொண்ட மாணவர்கள் பங்கு பற்றுவதால் மாணவர்களிடையே போட்டிகள் தலையெடுத்து கல்வித்தரம் உயர்வடைய வாய்ப்பளிக்கின்றது.

தனியார் கல்வி நிறுவனங்கள், கலை நிகழ்ச்சிகள், சமயவிழாக்கள், வினாவிடைப் போட்டிகள் என்பவற்றை நடைமுறைப்

நிலையில் அவர்களுடன் தனிப்பட்ட ரீதியில் உரையாடி அவர்களின் குடும்ப சூழலை கேட்ட

## வாதம் -4

றிந்தோ அல்லது அவர்களின் பெற்றோர்களுடன் கலந்தாலோசித்தோ அடிப்படை உரிமைகளில் ஒன்றான கல்வியை மாணவர்களுக்கு தனியார் கல்வி நிறுவனங்கள் ஈட்டிக் கொடுக்கின்றன.

மாணவர்களின் எழுத்தாற்றலை விருத்திசெய்யும் தனியார் கல்வி நிறுவனங்கள் தொழிற் பயிற்சி முறை மூலம் கல்வி வள அடைவு மட்டத்தை விஸ்தரிக்க முற்படும் தன்மையால் ஏனைய நிறுவனங்களால் நடாத்தப்படும் மொழித்திறன் போட்டிகளான கவிதைப் போட்டி, கட்டுரைப் போடடி, சிறுகதைப்போட்டி, நாடக எழுத்துருவாக்கப்போட்டி போன்றவற்றில் ஊக்கத்துடன் ஈடுபட பாடசாலைகளை விட தனியார் கல்வி நிறுவனங்கள் கூடிய வழிகாட்டிகளாக அமைந்துள்ளன.

கல்வியின் அதியுச்ச இரு

# மாணவரின் கல்வியை

## விவாத அரங்கு -7

ஆனால் இன்று கல்வி நிலையிற் பெரும் மாற்றங்கள் ஏற்பட்டதனால் தனியார் கல்வி நிலையங்கள் பாடசாலைகளை விடமுன்னணியிற் திகழ்கின்றன.

பாடசாலைகளில் முன்பு போல மாணவர்களைக் கண்டிக்

**நீர்வை தியாகமணி**

கவோ, அச்சுறுத்தி வழிப்படுத்தவோ முடியாதபடி கல்விக் கொள்கைகளும், அரசினரின் சட்டதிட்டங்களும் அமைந்திருப்பதனாலும், பாடசாலை ஆசிரியர்கள் தனியார் நிலையங்களில் மேலதிக ஊதியம் பெறும் பேராசையாற் பாடசாலையில் கற்பித்தலில் அக்கறை இல்லாதிருப்பதும் காணக்கூடியதாக உள்ளது.

பாடசாலை செல்லும் மாணவர்கள் அதே பாடசாலை ஆசிரியர்களிடம் தனியார் கல்வி நிறுவனங்களிற் கற்கக் கூடியளவு கற்கை நெறியினைப் பாடசாலையிற் பெறமுடியாதுள்ளது. காரணம் பாடசாலை அரசாங்க ஊதியத்திற்காகக் கூலிக்கு மாரடிக்கும் செயற்பாடகவும், தனியார் கல்வி நிறுவனங்கள் மேலதிக ஊதியம் பெறவும் மாணவர்களிடமிருந்து சலுகைகளைப் பெறவும் வாய்ப்பாய் அமைகிறது.

இதனால் பல ஆசிரியர்கள் பாடசாலையில் கடமையாற்றி விட்டுத் தனியார் கல்வி நிறுவனங்களிலேயே தம் திறமையை வெளிப்படுத்துவதுடன் மாணவர்களின் தேர்வுக்கான கற்பித்தலிலும் அக்கறை காட்டுகின்றனர்.

இன்று தனியார் கல்வி நிறுவனங்களில் கல்வி கற்றாலே பரீட்சையிற் சித்தியடைய முடி

விட்ட எமது கல்விச் செயற்பாட்டில் தனியார் கல்வி நிலையங்கள் மாணவர்களின் கல்வியைச் சீர்படுத்துகின்றன என்பதையாரும் மறுக்க முடியாது.

தனியார் கல்வி நிறுவனங்களால் மாணவர்கள் ஒழுக்கங்கள், செயற்பாடுகள் சீரழிகின்றன எனக் கூறுபவர்கள் பாடசாலைகளில் கல்விச் செயற்பாடுகள் கற்பித்தல் என்பன குறைநதிருப்பதாலும் அவற்றை எடுத்துக் காட்டி ஆவன செய்யவும் கல்விப் பகுதியாருடன் முடியாததொரு நிலை நீண்டு வளர்ந்து கொண்டிருப்பதாலும் தனியார் கல்வி நிறுவனங்களைக் கட்டிக்காக்க வேண்டியுள்ளது.

கல்வக்கு முதன்மை கொடுக்கவேண்டிய அவசியமிருந்தும் அரசியலும், அடிக்கடிமாறும் ஆட்சிபபீடங்களும் தத்தம் அரசியற் சுயலாபங்களுக்காகத் தகுதியற்றவர்களையும், திறமையற்றவர்களையும், அனுபவமற்றவர்களையும் கல்விப் பகுதியிற் பல தரப்பிலும், பொறுப்புடையவர்களாக அமர்த்துவதும் பாடசாலைக்கல்வியைச் சீரழிப்பதாயமைந்துள்ளது.

மேலும் திறமையுடையவர்கள் கூட அரசியற் தலையீட்டிற்கு அஞ்சி ஏனோதானோ என நடக்க வேண்டியுள்ளது. இந்த நிலையிற் தனியார் கல்வி நிலையங்கள மாணவர்களிடம் பணம் அறவிடுவதற்காகவும், அறவிடும் பணத்திற்கு ஏதாவது செய்தேயாகவேண்டும் என்பதாலும், இதனைவிடத்தங்களிடம் கல்வி பயிலும் மாணவர்களின் சிறப்புத் தேர்வுகளை விளம்பரப்

கள் மாணவர்களின் கல்வியைச் சீர்செய்கின்றன என்பதை மறுக்க முடியாது.

இன்றைய பெருமளவான மாணவர்கள் தனியார்கல்வி நிறுவனங்களில் கல்விகற்றே தாம் பரீட்சைகளிற் சித்தியடைவதாகப் பகிரங்கமாகக் கூறுகின்றார்கள் எனின் பாடசாலைகளில கல்வி கற்பித்தல் செயற்பாடுகள் மோசமான நிலையில்

படுததுவதனூடாகவும் சிங்களம், ஆங்கிலம், பொதுஅறிவு சார்ந்த விடயங்களை புகுத்துவதனூடாகவும் சிறந்த தேர்ந்தெடுக்கப்பட்ட ஆசிரியர்களால் எதிர்கால மாணவச் சமுதாயம் பிரக்ஞை பூர்வமான சமுதாயமாக மிளிர வழிவகுக்கின்றது.

பாடசாலைகளில் நடைபெறும புதிய கல்விச் சீர்திருந்த கணிப பீட்டு வேலைத்திட்டங்களுக்கும், செயற்றிட்ட அறிக்கைகளுக்கும் சமர்ப்பிக்கக் கூடிய தகவல்களை சேகரிக்கும் தகவல் சேகரிப்பு நிலையங்களாக தொழிபட்டு மாணவர் கல்வி

**சுகந்தினி முருகேசு அச்சுவேலி தெற்கு**

மைற்கற்களான க.பொ.த.சாதாரண, க.பொ.த.உயர்தர பரீட்சைகளுக்கான வழிகாட்டல் கருத்தரங்குகளை தமது முழுநேர ஒத்துழைப்பையும் வழங்கி பாடசாலை செல்ல முடியாத மாணவர்களையும் இணைத்து பரீட்சை எழுத வழி சமைத்துக் கொடுப்பவர்கள தனியார் கல்வி நிறுவன ஆசிரியர்களே என்று கூறினால் மிகையாகாது.

# சீர்படுத்துகின்றன

இருப்பதையே எடுத்துக்காட்டுவதாயுள்ள. விதிவிலக்காகச் சில பாடசாலைகளும், அதிபர், ஆசிரியர்களும் இருந்தாலும், பெருமளவான கல்விச் செயற்பாடுகள் தனியார் கல்வி நிறுவனங்களே மாணவர்களைச் சீர்ப்படுத்துவதாக அமைந்துள்ளன என்பதை நாம் காணக் கூடியதாக உள்ளது. □

கூறற்குரிய சாதனை செயல் முறையை மறுசீரமைக்கும் நோக்குடனும் மாணவர்களை அறிவுத் தேடலுக்கு படிக்கற்கள் ஆக்கும் நோக்குடனும் உருவாக்கப்பட்ட தனியார் கல்வி நிறுவனங்களும் மாணவர்களின் கல்வியை சீர்படுத்துகின்றது. அந்த வகையில் கட்டுக்கோப்பான தனியார் கல்வி நிறுவனங்கள் நாட்டின் தலைசிறந்த பிரஜைகளை உருவாக்கும் நோக்கு

யில் தனியார் கல்வி நிறுவனங்கள் தனியான அக்கறையுடன் செயற்படுகின்றன.

பிரத்தியேக வகுப்புகளூடாகவும் மாணவர்களின் வரவொழுங்கை கண்காணிக்கும் நிலையமாகவும் தனியார் கல்வி நிறுவனங்கள் அமைய அவற்றின் செயற்பாடுகளை கட்டுப்படுத்தும தலைமைப்பீடமாக நிர்வாகி அமைந்து ஒவ்வொரு மாணவரினதும் தனிப்பட்ட கல்வியில் அக்கறை கொண்டு ஏனைய நிறுவன அமைப்புக்களைவிட ஊக்கத்துடன் தனியார் கல்வி நிறுவனங்கள் அமைகின்றன.

அரச அமைப்புக்களிலில்லாத வகையில் ஒவ்வொரு மாணவனின் கல்வியிலும் வினாக்களை வினாக்கொத்து முறையிலும் பேட்டி முறையிலும் வினவி அவைகளுக்கு விடைகாணாத

பாடசாலைகளைப் போன்று கட்டமைப்பான நேரசூசியின் அடிப்படையில் கூடியளவு மணித்தியாலங்களை உள்வாங்கி தனியார் கல்வி நிறுவனங்களில் கற்பிக்கப்படுவது யாவரும் அறிநததே.

மற்றும் மாணவர்களது ஒழுககம், பண்பாடு, பழக்கவழக்கங்கள், சமநோக்கு, மனிதநேயம், மனப்பான்மை விருத்தி, உள விருத்தி, நட்பு, புரிந்துணர்வு, சகிப்புத்தன்மை, வெற்றி தோல்விகளை சமமாக மதிக்கும் பண்பு போன்ற இன்னோரன்ன விழுமியங்களூடாக தனியார்கல்வி நிறுவனங்கள் மாணவர்களை சீர்படுத்துகிறது. ஆகவே தனியார் கல்வி நிறுவனங்கள் மாணவர் கல்வியை சீர்படுத்துகின்றன எனபதே எனது வாதமாகும். □

---

## கூட்டமைப்பு அரசாங்கம் எங்கே செல்கிறது? கேள்வி எழுப்புகின்றார் ரணில் விக்கிரமசிங்க

சமஷ்டி முறை வேண்டும் என்று ஜனாதிபதி கூறுகின்றார். ஆனால், சமஷ்டி முறை நாட்டைப் பிளவுபடுத்தும் என்றும் அரசாங்கத்தில் தாம் இருக்கும் வரை இதற்கு அனுமதிக்கப் போவதில்லை எனவும் ஜே.வி.பி.கூறுகின்றது. இவ்வாறன சூழலில் அரசாங்கம் எதனை நோக்கிப் பயணிக்கிறது? காலியை நோக்கியா? மாத்தறையை நோக்கியா? என்று எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரம சிங்க கேள்வி எழுப்பியுள்ளார்.

புத்தளத்தில் ஐ.தே.க.வின் அமைப்பாளர்களுடனான கூட்ட மொனறில் உரையாற்றிய போதே ரணில் விக்கிரமசிங்க இதனைத் தெரிவித்தார். மேலும் அவர் கூறியதாவது,

நாட்டுக்கு சமஷ்டி முறை வேண்டும் என்கிறார் ஜனாதிபதி. இதனை விரும்பாதவர்கள் வெளியேறலாம் என்றும் கூறியுள்ளார். ஜே.வி.பி.யோ சமஷ்டி முறையில் நாடு பிளவுபடுவதற்கு வழிவகுக்கும் என்கிறது. பொதுக் கட்டமைப்பையும் ஜே.வி.பி.எதிர்க்கின்றது.

பிரதமர் மகிந்த ராஜபக்ஷவோ கூட்டமைப்பு அரசாங்கத்தை பாதுகாக்க வேண்டும் என்கிறார். அரசாங்கத்துக்குள் இத்தகைய முரண்பட்ட நிலை காணப்படுகின்றது. சமஷ்டி முறையினால் அரசுக்குள் எழுந்துள்ள முரண்பாட்டினால் மக்களே இன்று கைவிடப்பட்ட நிலையில் உள்ளமை குறிப்பிடத்தக்கது.

(து)

## தீவுச்சேனை சம்பவத்தில் இராணுவத்திற்கு பங்கில்லை

## பிரிகேடியர் தயா ரட்நாயக்கா

(கொழும்பு)

புலிகள் அமைப்பிலிருந்து வெளியேறிய கருணா அமைப்பினருக்கும், விடுதலைப் புலிகளுக்குமிடையில் தீவுச்சேனையில் மோதல் இடம்பெற்றது.

இதில் இராணுவத்தினர் எவரும் சம்பந்தப்படவில்லை என இராணுவப் பேச்சாளர் பிரிகேடியர் தயாரட்நாயக்க தெரிவித்துள்ளார்.

இந்த மோதல் தொடர்பாக கிடைக்கப்பெற்ற தகவல்களின் படி விடுதலைப் புலிகள் அணியில் இருவர் உயிரிழந்திருக்கிறார்கள். கருணா பிரிவில் நால்வர் காயமடைந்துள்ளார்கள்.

இராணுவக் கட்டுப்பாட்டுப் பிரதேசத்துக்கும், விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பிரதேசத்துக்கும் இடையில் தான் இந்த மோதல் சம்பவம் இடம் பெற்றுள்ளது. தற்போது நிலைமை வழமைக்குத் திரும்பியிருக்கிறது.





இந்தப் பிரதேசத்தில் விடுதலைப்புலிகளும், கருணா குழுவினரும் தமது நிலையை பரஸ்பரம் உயர்த்தும் நடவடிக்கைகளுக்காகவே மோதல் நடவடிக்கைகளில் ஈடுபடுகிறார்கள். அதன் ஒரு அங்கமாகவே இந்த மோதல்கள் இடம்பெற்றிருக்கலாம் எனத் தான் நம்புவதாக அவர் தெரிவித்தார்.

பொலநறுவை மருத்துவ மனையில் தற்சமயம் சிகிச்சை பெற்று வரும் கருணா அணியினருக்கு உரிய பாதுகாப்பு நடவடிக்கைகளை அரசாங்கம் வழங்கியிருக்கின்றது.

கடந்த திங்களன்று காலை இடம்பெற்ற இச் சம்பவம் தொடர்பாக தாம் உத்தியோகபூர்வமாக யுத்த நிறுத்தக் கண்காணிப்புக் குழுவுக்கு முறையிட்டுள்ளதாகவும்,

ஆனால் யுத்த நிறுத்தக் கண்காணிப்புக்குழு இதனை மறுப்பது எந்த விதத்தில் நியாம் எனவும் பிரிகேடியர் ரட்நாயக்க கேள்வி எழுப்பியுள்ளார். (7,4)

# யாழ்.விஞ்ஞான சங்கம் நடாத்தும் பாடசாலை மாணவர்களுக்கான கண்காட்சிப் போட்டியில் இருந்து...





படங்கள்:- ஞா.ஐங்கரன்




# நிலநடுக்கம் குறித்து அறியப்படாத உண்மைகள்

அண்மையில் இந்துமா கடலில் ஏற்பட்ட நில நடுக்கத்தால் லட்சக் கணக்கான உயிர்கள் பலியாயின. ஏராளமான பொருள் சேதம் ஏற்பட்டது. கடந்த டிசெம்பர் மாதம் 26ம் திகதி இந்துமா கடலில் நிகழ்ந்த கடல் கொந்தளிப்பால் லட்சக் கணக்கான உயிரிழபபு ஏற்பட்டு மனித குலமே துயரக்கடலில் மூழகியது. இந்தக் கடல் கொந்தளிப்பு எதனால் ஏற்பட்டது? இந்தோனேசியாவில் சுமாத்ரா தீவுக்கு அருகில் நடுக்கடலில் கடலுக்கு அடியில் நிலநடுக்கம் ஏற்பட்டதால் கடல் அலைகள் மேலெழும்பி கொந்தளிப்பு உண்டானது.

ஆகவே இந்த அலை எழுச்சி ஒருவகை நில நடுக்கத்தின் வெளிப்பாடாகும். கடலுக்கு அடியில் ஏற்படுவது போன்று மலைப் பகுதியில் பூமியின் மிதவைத் தகட்டுச் சலனம் ஏற்பட்டு நில நடுக்கம் உண்டாகும் போது நிலச்சரிவு நிகழ்கின்றது.

பூமிக்கு அடியில் உள்ள நிலத் தகடுகள் ஒன்றோடு ஒன்று உராய்வதால் ஏற்படும் அதிர்ச்சியே



இந்த வகை நில நடுக்கம். இன்னொரு வகை நில நடுக்கம் பூமியின் உட்பகுதிக்குள் எரிமலைச் சீற்றத்தால் ஏற்படுவது. நில நடுக்கத்தின் போது ஏற்படும் அதிரலைகள் மூன்று வகைப்படும்.

ஒன்று முதல் நிலை அதிர்வலைகள். இவை நீளவாககில் பரவக் கூடியவை. இன்னொன்று அழுத்த அலைகள் அல்லது தள்ளும் அலைகள். இவை மணிக்கு 24ஆயிரம் கிலோமீட்டர் வேகத்தில் பாயக் கூடியது. இரண்டாம் நிலை அலைகள் நீரலைகள் போல செங்குத்தாக அதிர்கின்றன. இவை ஒன்றொடொன்று உரசுகின்றன. அதனால் இவற்றின் வேகம் மணிககு 16ஆயிரம் கிலோமீட்டராகக் காணப்படுகிறது. இந்த நில நடுக்கம் எப்போது ஏற்படும், எப்படி ஏற்படும் என்று யாராலும் சொல்ல முடியாது.

இதைக் கண்டறிந்து சொல்ல ஒரு கருவி இல்லை. ஆனால் நில நடுக்கம் ஏற்பட்டபிறகு அது எங்கே ஏற்பட்டது, எந்த அளவுக்கு ஏற்பட்டது என்பதை அளவிட ஒரு கருவி இருக்கின்றது. இதை ரிச்டர் அளவுகோல் என்கிறோம். இதை 1935இல் கண்டுபிடித்தவர் 'கார்லன் எப்.எப் ரிக்டர்' என்ற அமெரிக்க விஞ்ஞானி.

இதற்கு முன்னோடியாக சீஸ்மோகிராப் கருவி ஒன்று உண்டு. அதைக் கண்டுபிடித்தவர் ஒரு சீன விஞ்ஞானி. கி.பி. 132ஆம் ஆண்டில் சாங்ஹெங் என்பவர் கண்டு பிடித்த இந்தக் கருவி ஒரு தாழி அல்லது பானை போன்றது. அதன் எட்டுத் திசைகளிலும் வாய்பிளக்கும் திறப்புக்கள் உள்ளன. பூகம்



பத்தின் போது அதில் இருந்து உமிழப்படும் குண்டு ஒன்று தாழியைச் சுற்றிலும் கீழே வைக்கப்பட்டுள்ள 8 மேழைகளில் ஏதேனும் ஒன்றின் வாயில் குபுக் என்று விழும். அந்த மேழையின் திசை கோக்கியே நடுக்கம் ஏற்பட்டது என்று கண்டு கொள்ளலாம். இப்போது இந்தக் கருவி லணடன் அருங்காட்சியகத்தில் வைக்கப்பட்டுள்ளது. (க)

நன்றி இணையத்தளம்

# தையல் கைப்பணி கண்காட்சி

(பொன்னாலை)

சண்டிலிப்பாய் பிரதேச செயலகத்தில் எதிர்வரும் 26ஆம் திகதி சனிக்கிழமை தையல் கைப்பணிக் கண்காட்சி ஒன்று இடம்பெறவுள்ளது.

இக் கண்காட்சி நிகழ்வில் யாழ்.மாவட்ட மேலதிக அரச அதிபர் ஆ.சுவாமி பிரதம அதிதியாகக் கலந்துகொள்கிறார்.

கிராமிய அபிவிருத்தித் திணைக்களத்தின் அனுசரணையுடன் அன்றையதினம் காலை 9.30மணிக்கு இத் தையல் கைப்பணிக் கண்காட்சி ஆரம்பித்து வைக்கப்படும் என்பதும் குறிப்பிடத்தக்கது.(க-49)

## "நான் ஆசிர்வதிக்கும் கிண்ணம் கிறிஸ்துவின் இரத்தத்தில் பங்கு கொள்ளுதல் அன்றோ"



## தவக்காலச் சிந்தனை

நற்கருணை - உறவின் விழா. தன்னையே உணவாக தந்த இயேசு மனிதர்களோடு நெருக்கமாக கொண்ட உறவின் விழா. இறைவன் தரும் திருப்பந்தியில் சகோதரர்களாக, சகோதரிகளாக நாம் பங்கு பெறும் சமபந்தியில் திருவிழா. நற்கருணை - பிறரன்பின் விழா. கோதுமை மணி போல் தன்னையே அழித்து பிறருக்கு உணவாக, பிறரை வாழ வைக்க அழைக்கும் விழா. நற்கருணை - பகிர்வின்விழா. ஐந்து அப்பங்களை ஐயாயிரம் பேருக்கு பகிர்ந்தளித்த இயேசு தன்னையே உணவாக எல்லோருக்கும் தரும் விழா. சிலர் பசியாய் இருக்க சிலர் உண்டு குடிப்பது இறைவனின் திருவுளமல்ல (1கொரி 11:21-22). நம்மிடம் இருப்பதையெல்லாம் பிறரோடு பகிர்ந்து வாழாமல் நற்கருணை கொண்டாட்டம் மட்டும் எப்படி அர்த்தமுள்ளதாகும் என்பது பவுலடியாரின் கேள்விக்குப் பதிலாகும் விழா. நற்கருணை - நாம் அருளடையாளமாக மாற அழைக்கும் திருவிழா. உறவின் மூலம், பிறரன்பின் மூலம், பகிர்தலின் மூலம் நாமும் பிறருக்கு அருளடையாள மாக விளங்கி உந்து சக்தியாகத் திகழும் விழா.

காவலன்

# பிணைந்து பிரிந்த கண்டங்கள்

**உயிரினங்களின் பிறப்பு, வளர்ச்சி, தளர்ச்சி, இயக்கம், இறப்பு போலவே உயிரற்ற பிண்ட கோளமான பூமி என்னும் அண்டமும் தோற்றம், வளர்ச்சி, தளர்ச்சி, நகர்ச்சி, முடிவு ஆகிய அகிலவியல் தோற்ற நியதியைப் பின்பற்றி வருகிறது. மனித உடலை இயக்கிவைக்கும் ஆத்மா போன்று, பூமி என்னும் அண்டத்தை பல மில்லியன் ஆண்டுகளாக உட்கருவில் உள்ள கனல்சக்தி, காந்த சக்தி என்பன கட்டுப்பாடு செய்துவருகின்றன.**

கோளத்தின் பூர்வீக வளர்ச்சிமுறைகள் தெளிவாக அறியமுடியாமல் மங்கியிருந்தாலும் நவீன விஞ்ஞானம் பூமி எவ்விதம் உருவானது, எத்தனை வயதுடையது, எப்படி உயிரினங்கள் உதித்தன போன்ற புலப்படாத சில புதிர்களை விடுவித்துள்ளது என்கிறார் ஜெரால்டு ஹாகினஸ்.

வட தென் அமெரிக்கக் கண்டங்கள், ஐரோப்பா, ஆபிரிக்கா ஆகிய கண்டங்களிலிருந்து பெரும் பூகம்பங்களாலும கடல அலையையும் கிழித்து பிரிநதுசென்றன.


ஆப்ரஹாம் ஆர்டிலியஸ் (டச் பூதளப்பட வரைஞர் 1596) காகிதம் ஒன்றைக் கிழித்து மறுபடியும் கிழிநதவற்றை ஒத்தவடிவுகளில் மீண்டும் இணைப்பது போன்றது. தென் அமெரிக்காக் கண்டத்தன் கிழக்குக கடற்கரைப் பகுதயும், ஆபிரிக்காக் கண்டத்தின் மேற்குக் கடற்கரைப் பகுதியும் அவ்வித ஒருங்கிணைப்புள்ள விளிம்புகளைக் கொணடவை. ஆல்பரெட வெஜினர் (பூதள விஞ்ஞான மேதை 1915) டேதிஸ் கடல் என்பது 180 மில்லியன் ஆண்டுகளுக்கு முன்னே பெருங்கண்டங்களான கோந்துவானா, லௌரேசியா இரண்டுக்கும் இடையில் உண்டானது.

யுரேசியா கண்டமும், ஆபிரிக்கா கண்டமும் 45 மில்லியன ஆண்டுகளுக்கு முன்பு பிணையும்போது சில பகுதி டேதிஸ் மத்தியதரைக் கடலாகவும, மீதிப பகுதி இந்துமாகடலில் ஒரு பாகமாகவும் சிக்கிக்கொண்டன. அலெக்ஸாண்டர் துடாய்ட் (பூதளவாதி தென்னாபிரிக்க 1878 -1948).

750மில்லியன் ஆணடுகளுக்கு முன்பு ரொடினியாப் பெருங்கண்டம் பூமையக்கோடுக்கு அருகில் பிளக்க ஆரம்பித்தது.

வட அமெரிக்கா பனிமயம் சூழ்நத தென் துருவம் நோக்கிச் சுற்றிவந்தபோது வடபாதி ரொடினியா கண்டத்தில் இருந்த அண்டார்க்டிகா, அவுஸ்திரேலியா, இநதியா, அரேபியா பகுதிகள் கடிகார எதிர்ச்சுற்றில் பெயர்ந்தன. அடுத்த பகுதி அவ் விரண்டுக்கும் இடையில் சிக்கியது. பிரிகாம்பியன் யுகத்தில் அம்மூன்று பகுதிகளும் மோதிக்கொண்டு பன்னோசியா பெருங்கண்டமாக உருவாகியது.

Hovement of Indian Subcontinent (2 to 3cm per year)



கிரிஸ்டொபர் ஸ்காடிஸ் (அமெரிக்கன் பூதளவாதி) 1755 ஆம் ஆண்டில் ஜெர்மன வேதாந்தி இன்மானுவேல் கெண்ட் (1724 - 1804) வெளியிட்ட அண்டக்கோள்களின் கோட்பாட்டில் ஆரம்பகாலத்தில் எங்கும் குளிர்மயமாக இருந்தது. வாயுக்களும் அணடத் துணுக்குகளும் கலந்த முகில மண்டலம் சுழன்று வந்தது என்று கூறுகிறார்.

1796இல் அரவது ஏக காலத்துப் பிரெஞ்ச் கணித மேதையான பியர் சைமன் லாப்பிளாஸ் (1749 - 1827) அக்கருததை மேமபடுத்தி அந்த வாயுமயமான முகிலிலிருந்து எவவிதம் பரிதி உண்டானது என்று அனுமானிக்கிறார். அகில விசைகளால் திரணட வாயுக்கோளம் சுற்ற ஆரம்பித்துத் தனது ஈர்ப்புவிசையால் கோளம் கருங்கி அதன் வாயுத் திணிவு அடர்ததியானது என்று கூறுகிறார்.

உயிரினங்களின் பிறப்பு, வளர்ச்சி, தளர்ச்சி, இயக்கம், இறப்பு போலவே உயிரற்ற பிண்ட கோளமான பூமி என்னும் அண்டமும் தோற்றம், வளர்ச்சி, தளர்ச்சி, நகர்ச்சி, முடிவு ஆகிய அகிலவியல் தோற்ற நியதியைப் பின்பற்றிவருகிறது. மனித உடலை இயக்கிவைக்கும் ஆத்மா போன்று, பூமி என்னும் அண்டத்தை பல மில்லியன் ஆண்டுகளாக உட்கருவில் உள்ள கனல்சக்தி, காந்தசக்தி என்பன கட்டுப்பாடு செய்துவருகின்றன.

எரிமலை, பூகம்பம் போன்ற பூகோளத்தின் கொந்தளிப்புககு ஆதிமுதல் தோன்றிய கனல் குழம்பு உலையே காரணமாகிறது. பூகோளக் கண்டங்கள் சேர்ந்து இருந்ததற்கும், புலம்பெயர்நது விலகிச்சென்றதற்கும் உட்கரு கனல் குழப்பின் மேல் கீழ் சுற்றியக்கமே காரணம், ஒரு பில்லியன் ஆண்டுகளாக உலகப் பெருங்கண்டங்கள் பலமுறை பிணைந்தும், பிரிந்தும் வந்ததாக அமெரிக்கப் பூதள விஞ்ஞானி கிரிஸ்டொபர் ஸ்காடிஸ் கூறுகிறார்.

கடற்தளங்களில் நிகழும் கொந்தளிப்பு, பிறழ்ச்சிகள் 4 பில்லியன் ஆண்டுகளுக்கும் மேலாகப் பூமியின் மலர்ச்சிக்கும், நகர்ச்சிக்கும் ஆற்றல்தரும் உட்கருவின் வெப்பசக்தியே. நாம் வாழும் கண்டங்களை உண்டாக்கிக் கடற்குழிகளைத் தோண்டி நீர் வெள்ளததால் நிரபபியுள்ளது விந்தையிலும் விந்தையாக உள்ளது.

கடற்தளங்களில் எரிமலைகளும், பூகம்பங்களும் எல்லை வரைந்து கூறுபடுத்திய 16 கடற்பாறைத் தட்டுகள் உலகக் கண்டங்களைப் புலப்பெயர்ச்சி செய்து கனல் குழம்பில் ஏற்றிச்செல்லும் கட்டுமரங்களாக மிதந்து வருகின்றன.

கடற்தட்டுகள் ஒன்றைவிடடு ஒன்று விலகிச் செல்லலாம். அல்லது ஒன்றை ஒன்று நெருங்கிக்கொள்ளலாம். அல்லது ஒன்றின்மீது ஒன்று குதிரை ஏறிக் கொள்ளலாம். உட்கருவின் கனல் குழம்பு துளையிட்டு எரிமலையாய் எழுந்து பாறைவடிவில் மலைத் தொடராகப் பூகோளத்தின் கடற்தளத்தில் சுமார் 40,000 மைல்கள் நீண்டு, கடல்மையப் புடைப்புகளாய் மலைப்பாம்பு போல் கிடக்கிறது.

மேலெழும் கனல்குழம்பு விலகும் தட்டுகளை மேற்கொண்டும தள்ளுகிறது. சுருங்கும் பகுதிகளில் கீழ்த திணிப்பு அரங்கங்களை உண்டாக்கி நிலநடுக்கங்களைத் தூண்டிவிட்டுக் கடல் அலைகளில் சுனாமி அபாயங்களை ஏற்படுத்தும் வல்லமை பெற்றது. அப்போது உந்துவிசைகள் எழுவதால்தான் உலகக் கண்டங்கள ஆண்டுக்கு (0.5 - 6.0) அங்குல வீதம் ஆமைவேகத்தில் நகர்ந்துசெல்கின்றன. மேலும் அவ்விதக் கடற்தட்டுப் பிறழ்ச்சி இயக்கத்தில் ஏற்படும் விரிவிலும், திணிப்பிலும் புதிய கடற்பாறைகள் பிறப்பதும் பழைய பாறைகள் மறைவதும் மாறி மாறி நிகழ்ந்துவருகின்றன.

குறுகும் எல்லைப் பகுதிகளில் கண்டங்கள் ஒன்றின் மீது ஒன்று மோதும்போது இமயமலைத் தொடர்கள், திபெத் பீடங்கள் போன்று பூமியில் புடைத்து எழுகின்றன. அத்தகைய மோதல்களில் பேரதிர்ச்சிகள் உண்டாகி ஈரான், சைனாவில் ஏறபட்ட பூகம்பம் போல் பெருஞ்சேதங்களும், கோரமரணங்களும் விளைகின்றன. எங்கே விலகும் எல்லைப் பகுதிகள் உண்டாகின்றனவோ அங்கே சுமாத்திராவின் சுந்தாபள்ளம்போல பிறழ்ச்சிக் குழிகள் தோனறிக் கடற்தட்டுகளை மேற்கொண்டும் பிரித்துவிடுகின்றன. ஆபிரிக்காவின் அருகில் உளள செங்கடலில் அத்தகைய பெருங்குழி ஒன்று உட்டாகிப் பிள்ளைக் கடல் அரங்கு உருவாகி வருகிறது! அத்துடன் கடற்தட்டுக்களைக் கடந்தும் பொதுத் தளங்களில் சங்கிலிபோல் எரிமலைகள உண்டாகிப் புதுத்தீவுகள் எழுகின்றன. ஹவாய்த் தீவுகள் அவ்விதமே உண்டாகிப் பெருகிவருகின்றன.

### ரொடினியா, பன்னோசியா பூதக் கண்டங்களின் பிறப்பும் மறைவும்

650 மில்லியன் ஆண்டுகளுக்கு முன்பு பூகோளத்தில் தோன்றிய பூதப்பெருங்கண்டம் 'ரொடினியா' துண்டு துண்டுகளாய்ப் பிளந்து, சிறு கண்டங்களாகப் பிரிந்து, பாதிப் பகுதிகள் கடலில் மூழ்கின. பல மில்லியன் ஆண்டுகளாகப் பரிந்த துண்டுக்கண்டங்கள் மறுபடியும் பிணைந்து, பிறகு மீண்டும் தனியாய்ப் பிரிந்து பல்லாயிரம் மைல்கள் மெதுவாகப் புலப்பெயர்சசியாகி நாம் இப்போது வாழ்ந்துவரும் கலியுகக் கண்டங்களாகக் காட்சி தருகின்றன. அந்தப் புலப்பெயர்ச்சி சமீபத்தில்தான் புரட்சிகரமான பூதளத்தட்டுப் பிறழ்ச்சி நியதிமூலம் நிருபிக்கப்பட்டுள்ளது.

அமெரிக்காவில் டெக்ஸ் பல்கலைக்கழதக்தைச் சோந்த பூதளவாதி கிரிஸ்டொபா ஸ்காடீஸ் சமீபத்தில் கடற்தட்டுப் பிறழ்ச்சிகளைப் பற்றி விளக்கினார், அவரும் வெஜினரைப் போலவே நிருபிக்க பூர்வீகப் படிவங்கள், பாறைகள் போன்ற சான்றுகளை எடுத்துக்கொண்டார்.

ஆனால் வெஜிகரைப் போலன்றி ஸ்காடீஸ் கதிர்வசும் ஏகமூல மாதிரிகளை எடுத்துக்கொண்டு பாறைகளின் தோற்றக்காலங்களைக் கணக்கிட்டு, பூர்வீகக் காந்தசக்தியை அளந்து, துருவமுனைகளுக்கு ஏற்ற அமைப்பில் பதிவுசெய்தார். அம்முறையில் நவன கணக்கீடுகளைப் பயன்படுத்தி அவர் ஒரு புதிய பெருங்கண்டத்திற்குச் சான்று காணமுடிந்தது. 1.1 பில்லியன் ஆண்டுகளுக்கு முன்னே பிணைந்திருந்த ரொடினியா பூத கண்டத்தின் அமைப்புதான் அது. ரொடினியா பெருங் கண்டத்தில் மைய ஆபிரிக்காப் பகுதியைத் தவிர மற்றைய கண்டங்கள் அனைத்தும் இணைந்து, வட அமெரிக்கா அதன் நடுவில் இருந்தது.

உலகக் கண்டங்களின் புலப்பெயர்ச்சிக் கருத்து உடனபாடாகிப் பூதள விஞ்ஞானிகளால் ஒப்புக்கொள்ளப்பட்டது. இருபதாம் நூற்றாண்டில் நிகழ்ந்த ஒரு மகத்தான சாதனை என்று பறைசாற்றப்படுகிறது. பூமி தோன்றியது முதல், கண்டங்கள் தொடர்ந்து கடற்தட்டுகள் மீது ஆமைவேகத்தில் சவாரி செய்துவருகின்றன என்னும் கோட்பாடு பிரபஞ்ச நியதியாக எடுத்துக்கொள்ளப்பட்டுள்ளது. கடந்த ஒரு பில்லியன் ஆண்டுகளாகக் கண்டங்கள் பலமுறை பிணைந்தும், பிரிந்தும் இடம் மாறிமாறி வந்துள்ளன. பாலியோஸோவிக் யுகத்தின் இறுதியில் சில கண்டங்கள் இணைந்து, சமீபத்திய பாங்கியா பெருங் கண்டமாக இருந்தது. 1970இல் பூர்வகாந்த உளவுகளின் மூலம் நிருபணமான கிரென்வில் மலைத்தொடர் கண்டுபிடிக்கப்பட்டு பிரிகாம்பியன் பெருங்கண்டம் ஒன்று ஒரு பில்லியன் ஆண்டுகளுக்கு முன்பு இருந்ததாக அனுமானிக்கப்பட்டது. பல பெயர்களில் அழைக்கப்பட்ட அக்கண்டம் முடிவில் ரொடினியா என்னும் பெயர்பெற்றது.

750மில்லியன் ஆண்டுகளுக்கு முன்பு ரொடினியாப பெருங்கண்டம் பூமையக்கோடுக்கு அருகில் பிளக்க ஆரம்பித்தது. வட அமெரிக்கா பனிமயம் சூழ்ந்த தென்துருவம நோக்கிச் சுற்றி வந்தபோது, வடபாதி ரொடினியா கண்டத்தில் இருந்த அண்டார்கடிகா, ஆஸ்திரேலியா, இந்தியா, அரேபியா பகுதிகள் கடிகார எதிர்ச்சுற்றில் பெயர்ந்தன. அடுத்த பகுதி அவ்விரண்டுக்கும் இடையில் சிக்கியது. பிரிகாம்பியன் யுகத்தில் அம்மூன்று பகுதிகளும் மோதிக்கொண்டு பன்னோசியா பெருங்கண்டமாக உருவாகியது. பிரிகாம்பியன் யுகத்திற்கு இறுதிக்காலத்தில் பன்னோஸியா பெருங்கண்டம் பிளக்க ஆரம்பித்தது. அது துண்டுக் கண்டங்களாகி லௌரென்சியா கோந்துவானா பால்டிகா, சைபீரியா ஆகப் பிரிந்தன. அதாவது பென்னோசியா பெருங் கண்டமே பின்னால் பாங்கியா பெருங்கண்டமானது.

அண்டார்க்டிகாவில் கண்ட பூர்வப்படிவங்கள் (Antarctica Fossils)



### இமயமலைத் தொடர்களின் பிறப்பும், வளர்ச்சியும்

150 மில்லியன் ஆண்டுகளாக ஆமை வேகத்தில் நகர்ந்த புலப்பெயர்ச்சியில் இந்திய உபகண்டத்தன் நீண்டகாலக் கடற்பயணம் முடிந்து, 60 மில்லியன் ஆண்டுகளுக்கு முன்பு யுரேசியப் பெருங்கண்டத்துடன் மோதியது! அப்போது இந்திய உப கண்டம் சற்று விரைவாகப் பூமையக்கோட்டைக் கடந்து, வட திசையை நோக்கிச் சென்று டேதிஸ் கடலை நசுக்கி யுரேசியா கண்டத்துடன் பிணைத்துக் கொள்ளும்போது. உலக உச்ச சிகரமான மௌண்ட் எவரெஜ்ட் மலை மெதுவாக எழுந்தது. அந்த டேதிஸ் கடல் இப்போது முழுவதும் மறைந்துவிட்டதாயினும், அதன் புழுதிப் பாறைகள் கடலடியில் படிந்துள்ளது, அப்போது குமுறியெழுந்த எரிமலைகள் அவற்றை அரித்துள்ளதும் காலச் சின்னங்களாய்த் தம்மிருக்கையைக் காட்டிவருகின்றன. சிதறித் துண்டுகளாகப்போன பாறைச் செதுகுகள் திரண்டு மலைத தொடராய்ப் பூதவடிவில் எழுந்து மைய ஆசியாவை வரண்ட குளிர்ப் பிரதேசமாக்கியது.

நாம் வாழும் கண்டங்கள் பெரும்பாலும் கடற்தட்டுகள் மீதுள்ள குவார்ட்ஜஸ் பாறைக் செதுகுகள் கொண்டவை. எளிய திணிவுள்ள குவார்ட்ஸ் செங்கறகள பூதள உட்கருக் கனல்குழம்பில் மூழ்காமல் மேலே மிதக்கின்றன. குறைந்தது 80 மல்லியன் ஆண்டுகளாக இந்தியக் கடற்தட்டு, திபெத் உட்பட யுரேசியாவின் தென்பகுதி மீது தொடர்ந்து மோதிவருகின்றன. வட இந்தியாவின் கனத்த கடலடித்தட்டு யுரேசியத்தட்டின் கீழ் தணிந்து திணிக்கப்பட்டு உடகருவின் கனல்குழம்பில் பாய்ந்து மூழ்கிறது. கடற்தட்டுத் திணிப்பால் உட்கருவில் அழுத்தம மிகையாகித் திபெத் பகுதிகளில் எரிமலைகள் கிளம்புகின்றன. ஆயினும் கடந்த 25 மில்லியன் ஆண்டுகளாக விரைவாக நகரும் இந்திய உபகண்டம் இடைப்படட கடற்பகுதியை அடைத்து புழுதிப் பாறைகளால் நிரப்பிமூடியது. எளிய பாறைச் செதுகுகள் கீழே திணிக்கப்படாமல் மேலே தள்ளப்பட்டு இமயமலைத் தொடராய் உயர்ந்துகொண்டேபோகிறது.

இமயமலை எதிர்காலத்தில் எப்படி இருக்கும்? அடுத்துவரப்போகும் 5-10மில்லியன் ஆண்டுகளுக்கு இந்தியக் கடற்தட்டு அதேவேகத்தில் (வருடம் 15 செ.மீ வீதம்) வடக்கு நோக்கி நகர்ந்து சிகரத்தின் உயரம் மிகையாகும். பத்து மில்லியன் ஆண்டுகளில் இந்தியத் தட்டு திபெத் அரங்கிற்குள் 100 மைல் (180 கி.மீ) தூரம் உழுதுகொண்டு நுழையும். நேபாள தேசத்தின் அகலமே அதுதான் (100மைல்). அதாவது விஞ்ஞான முறைப்படி அனுமானித்தால் அந்தக் காலங்களில் நேபாள நாடே மறைந்துபோகலாம். ஆனால் உச்ச சிகரம் கொண்ட இமயமலைத்தொடர் நிச்சயம் அப்போதும் தலைதூக்கிக் கொண்டிருக்கும்.

பூகோளக் கண்டங்களின் பூர்வீகத் தோற்றமும், மறைவும் துவக்ககாலத்தில் எல்லாவற்றுககும் முன்னதாகத் தோன்றிய பூதக்கண்டம் 'ரொடினியா' 750மில்லியன் ஆண்டுகளுக்குப் பிறகு துண்டுகளாகப் பிரிய ஆரம்பித்து அவற்றின் இடையே பிரமாண்டமான கடற்பகுதிகள் எழுந்தன. அப்போது ஒருபகுதி வடதுருவத்தை நோக்கியும், மறுபகுதி தென்துருவத்தை நோக்கியும் நகர்ந்தன. குன்றுகள் உயர்ந்தன. பூமத்திய ரேகைப் பகுதியில் உள்ள மலைச்சிகரங்களில் கூடப் பனிமூட்டம் பெருகிற்று. வடக்கில் சென்ற துண்டுக் கண்டங்கள் ஆபிரிக்காகண்டம் மீது மோதின. 600 மில்லியன் ஆண்டுகளுக்குள் மீண்டும துண்டுகள் இணைந்து பன்னோசியா என்னும் பூதக்கண்டம் உருவானது. 550மில்லியன் ஆண்டுகளுக்கு முன்னே பாலியோஸோலிக் யுகத்தில் வட அமெரிக்காவின் மகத்தான செம்பாறைப் பள்ளதாக்கு யூரோ அமெரிக்காவின் ஒரு பகுதியாக இருந்தது.

514 மில்லியன் ஆண்டுகளுக்கு முன் பன்னோசியாவின் ஒரு பகுதி பிரிந்து கோந்துவானப் பெருங்கண்டம் தென்துருவத்திலே விடப்பட்டது. வடஅமெரிக்காவின் மேற்குக்கரை 90 பாகை சாய்ந்து, பூமையக்கோடு மீது படிந்திருந்தது.

அலைகள் உள்நுழைந்தும் வெளியேறியும் கடற்கரைகள் அடிக்கடி வெள்ளத்தில் மூழ்கின. கடலில் வாழும் டிரைலோபைட்ஸ் பூர்வப்படிவங்கள் தோன்ற ஏதுவானது. கடற்தள ஜந்துகளின் பூர்வபடிவங்களும் காணப்படன. பாலியோஸோலிக் யுகத்தின் இறுதியில் கண்டங்கள் மீண்டும் சேரத்தொடங்கி பாங்கியா பெருங் கண்டம் உருவானது.

# ஸ்ரீ வைத்தீஸ்வர சுவாமி தேவஸ்தான

## இரதோற்சவ சிறப்பு மலர் 24.03.2005




### ஆதீன முதல்வரின் அருளாசிச் செய்தி

யாழ்.வண்ணை ஸ்ரீமத் வாலாம்பிகா சமேத ஸ்ரீ வைத்தீஸ்வரன் ஆலயத்தின் இன்றைய தேர்த் திருவிழா நாளில் கரங்கூப்பிச் சிரந்தாழ்த்திப் போற்றித் துதிக்கும் அடியார் பெருமக்கள் அமைதியும் சுபீட்சமும் பெற்று மகிழ்ச்சியோடிணைந்த மங்கள வாழ்வு வாழவேண்டுமென்று உளமாரப் பிரார்த்தித்து அருளாசி வழங்குகின்றோம்.

மஹோற்சவத்தில் இரதோற்சவம் அழித்தலைக் குறிப்பதாகும். ஆகவே. கொலை பாதகச் செயல்கள், குற்றச்செயல்கள், வன்முறைகள், தீச்செயல்கள் அனைத்தும் அழிந்தொழிய வேண்டும். பஞ்சமா பாதகங்கள் பாரில் இல்லாதொழியவேண்டும். இன்றைய பஞ்சரதப் பவனி காணவருகின்ற பக்தர் குழாம் பரமனின் பெருங் கருணைத் திருவருளுக்குப் பாத்திரமாகி வாழ்வில் வளம் பெருகி, நல்வாழ்வு வாழவேண்டுமென்று ஆசி கூறிப் பிரார்த்திக்கின்றோம்.

'என்றும் வேண்டும் இன்ப அன்பு'

ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாச்சார்ய சுவாமிகள்
இரண்டாவது குரமஹாசந்நிதானம்,
நல்லை திருஞானசம்பந்த ஆதீனம்.



### பிரதம குருவின் ஆசிச் செய்தி



'செட்டியார் சிவன்கோவில்' எனக் கூறப்படும் வண்ணை வைத்தீஸ்வரன் தேவஸ்தானம் இன்றைக்கு பலநூற்றாண்டுகட்கு முன் 1750ஆம் ஆண்டளவில் தமிழ்நாடு தஞ்சாவூரிலிருந்து வந்து யாழ்மண்ணில் குடியேறிய கோபாலன் செட்டியார் வைத்திலிங்கம் செட்டியாரால் ஸ்தாபிக்கப்பட்டதாகும்.

யாழ்.வண்ணை நகரின் மத்தியிலே இராஜகோபுரத்துடன் பொலிவுடன் விளங்குகின்ற வைத்தீஸ்வரன் தேவஸ்தானத்திலே ஆண்டுதோறும் பங்குனி உத்திர நாளை தீர்த்த நாளாகக்கொண்டு முன்பதினெட்டு நாட்கள் சிவனுக்கு மஹோற்சவமும், ஆடிப்பூரத்தை தீர்த்தநாளாகக் கொண்டு முதற் பத்து தினங்கள் தேவி மஹோற்சவமும் சிறப்பாக நடைபெறுகின்றன.

தஞ்சமென தன்னை வந்தடையும் ஆன்மாக்களின் மும்மலங்களையும் சம்ஹரித்து ஞானத்தை உணர்த்தும் விழாவே இதுவாகும். இத்தகைய ஆன்ம ஞானத்தை நல்கும் ஞான நாயகனின் பஞ்சரதப் பெருவிழாவில் வையத்து மக்கள் யாவரும் இறையருள் பெற்று மண்ணில் நல்லவண்ணம் வாழ்வாங்கு வாழ வழிசெய்ய இறைவனைப் பிரார்த்திக்கின்றேன்.

'பிரதிஷ்டா சிரோன்மணி' வேதாகமகிரியாபாநு
சிவஸ்ரீ -சோ.இ.பிரணதார்த்திஹரக்குருக்கள்.


சகலவிதமான ஓவிய, பிளாஸ்ரிக், இறப்பர் ஸ்ராம், பெயர்ப்பலகைகள் , டிஜிட்டல் லைபோட், எங்கிறேவிங் தொடர்புகளிற்கு

**யசோ ஆட் கிறபிக்ஸ்**

35, கன்னாதிட்டி வீதி,
யாழ்ப்பாணம்.
T.P:0777 -110610

**PRAKASH**
**TRANSPORT SERVICE**
COLOMBO - JAFFNA - COLOMBO
GENERAL MECHANTS & RICE MILLERS
221, Dam Street, Colombo -12.
Tel: 01-543310,01-387857
Fax: 01-338736
Prakash Agency, 457, K.K.S.Rd, Jaffna.
Tel:021-222 2145
Fax:021-222958

சித்த ஆயுர்வேத மருந்துகள்,
அபிஷேகப் பொருள்கள் விற்பனையாளர்

**க.சி.கைலாசபிள்ளை அன் சன்ஸ்**

5(76), பெரியகடை, யாழ்ப்பாணம்.
T.P: 021-222 2912

**ASEER**
**VANIGA NILAIYAM**
PAPER, STATIONERY AND GENERAL MERCHANTS
202 A, K.K.S.Road,
Jaffna, Srilanka.
T.P :021 222 2842
Fax: 021 222 2842
Mobile :0777 721740
Residence: 021 4590151

பலசரக்குப் பொருட்களை
மலிவாகப் பெற்றுக்கொள்ள
விரையுங்கள்

**முத்துவிநாயகர்**

418, காங்கேசன்துறை வீதி,
யாழ்ப்பாணம்.
T.P:021-222 6126

* சீன முறையில் சங்குப்பற்களைக் கட்டிக்கொள்ள
* மிதப்புப் பற்களை 'கிளிப்' போட்டு சீரமைத்திட
* இலவச கண்பரிசோதனை செய்துகொள்ள
* பல் சம்பந்தமான ஆலோசனைகளைப் பெற்றிட
* தரமான மூக்குக் கண்ணாடிகளை அதிநவீன பிறேம்களில் செய்துகொள்ள
* சண்கிளாஸ், கூலிங்கிளாஸ் வகைகள்
* பிளாஸ்ரிக், போடோகிறே லென்ஸ் வகைகளை மலிவு விலையில் பெற்றிட

**துஷா பல் மூக்குக் கண்ணாடியகம்**

544, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம். T.P:021 222 3461.

*கணனி மூலம் தமிழ், ஆங்கில தட்டச்சு
* ஒவ்(f)செற் பிறின்ட் * றோணியோ
மற்றும் சகலவிதமான அச்சுவேலைகளும் வேண்டிய வர்ணத்தில் சிறந்த முறையில் குறித்த தவணையில் குறைந்த செலவில் உங்கள் விருப்பத்திற்கேற்ற வகையில் செய்துகொள்ள

**தயா அச்சகம்**

138, நாவலர் வீதி, யாழ்ப்பாணம்.
T.P: 2881

**Sivan Motor Stores**
70/1, Manipay Road,
Jaffna, Srilanka.
T.P: 222 2763(off.)

**GOWRY FANCY HOUSE**
FOR GIFT ITEMS, EVERSILVER ITEMS, FANCY GOODS, TOYS, SCHOOLBAGS, SAWING ARTICALS, TRVELLING BAGS AND OTHER OINMANT GOODS
Gowry Fancy House
No.316, K.K.S.Road, Jaffna.
Tel:021 222 3227
Mobile: 0777-294539

**THULASI MAADAM**
Fancy goods, Gift items, Ever silver, Glassware, Plastic items, Toys etc,
251B, K.K.S Road,
Jaffna.
T.P: 021 - 222 5967

எம்மிடம் கலியான வைபவம் மற்றும் கொண்டாட்டங்களுக்கு முன்கூட்டியே ஐஸ்சர்பத், ஐஸ்கிறீம் வகைகள், அன்னாசி றிங்ஸ், ஐஸ் கோப்பி இன்னும் பல கூல் பானங்களுக்கு தொடர்பு கொண்டு பெற்றுக்கொள்ளலாம்.

**சித்திவிநாயகர் கிறீம் கவுஸ்**

271, காங்கேசன்துறை வீதி,
யாழ்ப்பாணம். Tel-021 222 2677

பலசரக்குப் பொருட்கள், மிக்சர் தயாரிப்பிற்கான பொருட்கள் மொத்தமாகவும், சில்லறையாகவும் பெற்றுக் கொள்ள நாட வேண்டிய ஸ்தாபனம்

**ஜெகன் களஞ்சியம்**

இல. 285, கே.கே.எஸ்.வீதி,
யாழ்ப்பாணம்.
T.P: 021 222 5035

ஓம் விராட் விஸ்வ பிரம்மனே நமஹ
நவீன அழகிய தங்க ஆபரணங்களுக்கு சிறந்த ஸ்தாபனம்

**பிரணகா நகைத் தொழிலகம்**

அசல் 22கரட் தங்க நகைகள் ஓடருக்கு உத்தரவாதத்துடன் செய்து பெற்றுக்கொள்ளலாம்.
68/A, கன்னாதிட்டி வீதி,
யாழ்ப்பாணம். ஊர்காவற்றுறை.

சுத்தம், சுவை மிகுந்த உணவை உண்டு மகிழ்ந்திடவும் கொத்து ரொட்டி, கிழங்கு ரொட்டி ஓடர் செய்து பெற்றுக் கொள்ளவும் நாடுங்கள்

**நிரோஜன் சைவ உணவகம்**

392 , K.K.S ROAD,
JAFFNA.

**TRACTOR SPARES**
Importers and dealers in Tractor Spare Parts
Specilist in Massy Ferguson Engineers.
7, Kannathiddy Road,
Jaffna.
T.P: 021 222 5055

இழந்த சக்தியை மீண்டும் பெற்றிட பாவியுங்கள்
**றோயல் குளுக்கோஸ்**
100% சுத்தமானது!
உங்கள் வியாபாரிகளிடம் நீங்கள் குளுக்கோஸ் வாங்கும் போது குளுக்கோஸ் என்று கேட்காமல்
றோயல் குளுக்கோஸ் தாருங்கள்! என்று கேட்டு வாங்குங்கள்!
PACKED BY: ROYAL INDUSTRIES COLOMBO 12
T.P: 0112334603
அனைத்து பார்மஸிகளிலும் கடைகளிலும் பெற்றுக் கொள்ளலாம்.




சிவா
நறுமணப் பூங்கா
288, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.
T.P:021 222 2567

# நவீன ஆயுதத்துடன் 5 ஆயிரம் பழங்குடியினர் பாக்.இராணுவ முகாமை சுற்றி வளைப்பு

பாகிஸ்தானின் இராணுவ முகாமை ஐந்தாயிரம் பழங்குடியின மக்கள் அதிநவீன ஆயுதங்களுடன் சுற்றி வளைத்துள்ளனர். இராணுவம் மீது எந்த நேரத்திலும் அவர்கள் தாக்குதல் நடத்தக்கூடும் என அஞ்சப்படுகிறது.

பாகிஸ்தான் பலுசிஸ்தான் மாகாணத்தில் தேரா புக்தி என்ற இடத்தில் பாகிஸ்தானின் முக்கிய இயற்கை எரிவாயு நிலையம் உள்ளது. இங்கு எடுக்கப்படும் எரிவாயுவுக்கு இப் பகுதியைச் சேர்ந்த பழங்குடியினர் 'ராயல்டி' கேட்டு வருகின்றனர்.

இவ்விடத்தில் மிகப்பெரிய இராணுவமுகாம் அமைக்க அரசு திட்டமிட்டுள்ளதற்கும் பழங்குடியினர் எதிர்ப்புத் தெரிவித்து வருகின்றனர்.

மலைகள் நிறைந்த இப்பகுதியில் பாகிஸ்தான் இராணுவ முகாம ஒன்று ஏற்கனவே உள்ளது. கடந்த வாரம் பழங்குடியினருக்கும், இராணுவத்துக்கும் நடந்த சண்டையில் 11 பழங்குடியினர் கொல்லப்பட்டனர். இதனால், பழங்குடியினர் கடும் கோபத்தில் உள்ளனர்.

இராணுவ முகாமை ஐந்தாயிரம் பழங்குடியினர் சுற்றிவளைத்துள்ளனர். அவர்களிடம் துப்பாக்கிகளும, கையெறி குண்டுகளும் உள்ளன. இப்பகுதியைச் சேர்ந்த இராணுவ பிரிகேடியர் சலீம் நவாஸ் இத்தகவலைத தெரிவித்தார்.

எந்தநேரத்திலும் எதுவும் நடக்கலாம் என்ற அவர், பழங்குடியினர் முற்றுகையிட்டு இருக்கும் வீடியோ காட்சியையும் பத்திரிகையாளர்களிடம் காட்டினார்.

முற்றுகையில் ஈடுபட்டுள்ள பழங்குடியினர் சாலைகளில் தடைகள் ஏற்படுத்தியுள்ளனர். பதுங்கு குழிகளும் தோண்டிவருகின்றனர்.

இப்பிரச்சினைக்கு விரைவில் தீர்வுகாண வேண்டும். இல்லையென்றால், மிகப்பெரிய பிரச்சினை ஏற்படக்கூடும். பழங்குடியினர் மீது தாக்குதல் நடத்த இராணுவத்துக்கு அதிகாரம்வழங் கப்பட்டுள்ளது. இருப்பினும் அதை நாங்கள் விரும்பவில்லை. கடைசி முயற்சியாகவே அதை மேற கொள்வோம் என்றார் சலீம் நவாஸ். (து)



சென்னையில் காலமான பழம்பெரும் நடிகர் ஜெமினிகணேசன் உடலுக்கு தமிழக முதல்வர் ஜெயலலிதா மலர்மாலை வைத்து இறுதி அஞ்சலி செலுத்துகிறார்.


## 589 இந்தியர்களை விடுவித்தது பாகிஸ்தான்

(இஸ்லாமாபாத்)

பாகிஸ்தான் கடல் எல்லைக்குள் மீன் பிடித்ததாகக் கைதுசெய்யப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டவர்கள் உட்பட அந்நாட்டுச் சிறையில் இருந்த ஐநூற்று 89இந்தியர்களை பாகிஸ்தான் அரசு நேற்றுமுன்தினம விடுவித்தது.

பாகிஸ்தான் சிறையில் உள்ள 900 இந்தியக் கைதிகள் விடுவிக்கப்படுவார்கள் என்று அந்நாட்டு அதிபர் பர்வேஸ் முஷாரப் கூறியதையடுத்து இவர்கள் அனைவரும் வாகா எல்லைப் பகுதியில் இந்திய அதிகாரிகளிடம் ஒப்படைக்கப்பட்டனர்.

இந்தியச் சிறைகளில் அடைக்கப்பட்டுள்ள 140 மீனவர்கள் உட்பட 388 பாகிஸ்தானியர்கள் விரைவில் விடுவிக்கப்படுவார்கள் என்று எதிர்பார்க்கப்படுகிறது அவர்களை பாகிஸ்தான் தூதரக அதிகாரிகள சிறைக்குச் சென்று சந்திக்க நடுவன அரசு அனுமதி அளித்துள்ளது. (து)



வங்களாதேசத்தில் வடக்குப் பகுதியில் பலத்த மழையுடன் புயல் காற்று வீசியது. இந்தப் புயலுக்கு பலியானவர்கள் எண்ணிக்கை 42 ஆக உயர்ந்துள்ளது. 700க்கும் மேற்பட்டவர்கள் காயமடைந்தனர். காய்பாந்தா நகரில் ஆயிரக்கணக்கான வீடுகள் இடிந்து தரைமட்டமாகிக் கிடக்கும் காட்சி.

# 9 பேரைச் சுட்டுக் கொன்ற பாடசாலை மாணவன்

அமெரிக்காவில் பள்ளி மாணவன் திடீரென துப்பாக்கிச் சுடு நடத்தியதில் ஒன்பது பேர் பரிதாகமாகப் பலியாயினர். பின்னர் அவன் தன்னைத் தானே துப்பாக்கியால் சுட்டுத் தற்கொலை செய்து கொண்டான்.

அமெரிக்காவில் உள்ள மினிசோட்டா பகுதியில உள்ளது பமிட்ஜி கனடா எல்லையில் அமைந்துள்ள இந்தப் பகுதியில் பழங்குடியினர் வசித்து வருகின்றனர். இங்கு 'ரெட் லேக் ஹை ஸ்கூல் என்ற பள்ளி செயல்பட்டு வருகிறது.

அந்தப் பள்ளியில் படிக்கும மாணவன் ஒருவன் திடீரென துப்பாக்கிகளுடன் நுழைந்தான். பள்ளிக்கு வெளியில் இருந்த காவலாளியை முதலில் சுட்டுக் கொன்றான். ஆவேசமாக வகுப்பறைகுள் நுழைந்த மாணவன், அங்கிருந்த ஆசிரியை, சக மாணவர்கள் மீது கண்மூடித்தனமாகத் துப்பாக்கிச் சூடு நடத்தினான். அதில் ஆசிரியை, மாணவர்கள் ஆறு பேர் சம்பவ இடத்திலேயே பலியாயினர்.

பள்ளிக்கு வரும் முன்பே ரெட் லேக் கிராமத்தில் தனது தாத்தாவையும் அந்த மாணவன் வீட்டில் சுட்டுக் கொன்றுவிட்டு அதே ஆவேசத்துடன் வந்துள்ளான் என்று அமெரிககப் புலனாய்வு அமைப்பானஎப்.ப.ஐயின் ஏஜென்ட் பால் மெகாபே கூறினார்.


துப்பாக்கிச் சூட்டில் ஈடுபட்ட மாணவனின் பெயரைப் பொலிசார் வெளியிடவில்லை. சிறுவனாக இருபதால் அவனுடைய பெயரும் வயதும் வெளியிடவில்லை எனறு பொலிசார் கூறினர்.

மாணவன் ஒருவனை நெற்றியில் துப்பாக்கியை வைத்து சுட்டுத தள்ளப் போனான். திடீரென மனசு மாறி, அவனைப் பார்த்துச் சிரித்துக் கொண்டே விட்டுவிட்டான். அதற்குப் பதில் வேறு ஒரு மாணவனைச் சுட்டுத தள்ளினான் என்று சம்பவ இடத்தில் இருந்த மற்ற மாணவர்கள் கூறினர்.

எதற்காக அந்த மாணவன் துப்பாக்கிச் சூடு நடத்தினான் என்பதற்கான காரணமும் தெரியவில்லை. (து)



அமெரிக்காவில் ஒரு பள்ளி மாணவன் சுட்டு 5 பள்ளி மாணவர்கள் உட்பட 9 பேர் பலியானதற்காக இரங்கல் தெரிவிக்கும் உறவினர்கள்.



கடலில் இருந்து மனிதனுக்குக் கிடைக்கும் அற்புதங்கள் பல . அதில் பல வகையான மீன்கள், விலை உயர்ந்த முத்துக்கள் அடங்கும். மீனிலும், நட்சத்திர மீன்கள் மிகவும் அரிது. ஆழ்கடலில் வாழும் நட்சத்திர மீன்கள் சில உயிரிழந்து சென்னை கடற்கரையில் கரை ஒதுங்கின. அவற்றை மீனவ சிறுவர்கள் கையில் வைத்திருக்கும் காட்சி.

# 50 வயதுக் கிழவருடன் 13 வயது சிறுமிக்கு கட்டாய திருமணம் செய்ய முயற்சி

50 வயதுடைய ஒருவரைத் தனக்கு கட்டாயத் திருமணம் செய்து வைப்பதாகக் கூறிப் பழங்குடியின சிறுமி பொலிசில் தஞ்சம் அடைந்தார்.

ஒரிசாவில் கினோஜர் மாவட்டத்தில் அண்மையில் இந்தச் சம்பவம் நடந்தது. சிறுமியின் சகோதரரும் மணமகனும் கைது செய்யப்பட்டனர்.

கோலா பழங்குடியினத்தைச் சேர்ந்த மினாதி காக்ராய் கிராமத்தில் நடந்த ஒரு நடன விழாவுக்கு வந்திருந்தார்.

அப்போது அதே கிராமத்தைச் சேர்ந்த சுனா ஹெம்ப்ராம் என்பவர் அச்சிறுமியின் நெற்றியில் குங்குமதிலமிட்டார்.

அந்த கிராம பழங்குடியினரின் வழக்கப்படி நெற்றியில் திலமிடுபவரே அப்பெண்ணுக்கு கணவராக அமைவார்.

இதற்கு மினாதி கடும் [illegible] தெரிவித்தார்.

இருப்பினும் மினாதியின் [illegible] ரும் சிறுமியைத் திருமணம் செய்து கொள்ள கட்டாயப்படுத்தினர்.

இந்நிலையில் கிராமத்திலிருந்து தப்பி வந்து அருகிலுள்ள காட்டில் 2 நாள் மறைந்திருந்த மினாதி பின்னர் பிராமணிபால் பொலிஸ் நிலையத்தில் தஞ்சமடைந்தார்.

மினாதி அளித்த புகாரின் பேரில் சகோதரர் மற்றும் மணமகனை பொலிஸார் கைதுசெய்தனர்.

தற்போது மினாதி அரசு காப்பகத்தில் தங்கவைக்கப்பட்டுள்ளார். (து)

உலக தரிசனம்



சீனாவின் ஜியான் நகரைச் சேர்ந்த ஒருவரது வீட்டில் நாயும், கோழிக்குஞ்சும் நெருங்கிய நண்பர்களாக வாழ்ந்து வருகின்றன.

இவை இரண்டும் ஒன்றைவிட்டு ஒன்று பிரியாமல் எப்போதும் இணைபிரியாமல் சுற்றித் திரிகின்றன. இந்த அதிசய ஜோடியைப் பார்க்க தினந்தோறும் கூட்டம் அலைமோதுகிறது.

# திரை உலகின் விடிவெள்ளி

# காதல் மன்னனின் திரையுலக வாழ்க்கை



பாப்ஜியுடன்

தமிழ்த் திரையுலகில் கொடி கட்டிப்பறந்த முப்பெரும் நடிகர்களில் ஜெமினியும் ஒருவர். எம்.ஜி.ஆர், சிவாஜி கணேசன் மற்றும் ஜெமினி கணேசன் ஆகியோரை மூவேந்தர் என்று அழைப்பார்கள்.

இந்த மூவரில எஞ்சியிருந்த ஒருவரையும் தமிழ்த் திரையுலகம் தற்போது இழந்துவிட்டது.

## ஜீவனுள்ள நடிப்பு

மனங்கவரும் காதலனாக, வீரம் நிறைந்த வாலிபனாக, கோபக்காரனாக, கூன்விழுந்த குருபியாக... பல்வேறு கதாபாத்திரங்களில் வேடமேற்று தமிழ்ப் படங்களில் சகல கலாவல்லவராக விளங்கியவர் ஜெமினி.

காதல் ரசம் சொட்டும் படமானாலும், சோகத்தைப் பிழியும் வேடமானாலும் அவர் தன்னுடைய தனித் திறமையில் ஜொலித்தவர். காமெடி, அதிரடி, வரலாறு, புராணம் என்று வேறுபட்ட 200க்கும் மேற்பட்ட படங்களில் நடித்துள்ளார்.

'வாழ்க்கை, ரசனையோடு வாழும போதுதான் அதில் ஜீவன் இருக்கும்' என்று ஜெமினி அடிக்கடி கூறுவார். வாழ்க்கையில் மட்டுமல்ல, நடிப்பிலும அந்த ஜீவனை அவர் வெளிக்கொண்டு வந்தவர்.

1947இல் அவர் ஜெமினி ஸ்டுடியோர்வில் சேர்ந்து நடித்ததால் ராமசாமி கணேசனாக இருந்த அவர் ஜெமினி கணேசனாக மாறினார். ஜெமினியின் நடிப்புத் திறமையை மெச்சும் வகையில் வந்த படங்கள் ஏராளம.

1953இல் 'மனம் போல் மாங்கல்யம்' தான் இவர் கதாநாயகனாக நடித்து வெளிவந்த முதல் படம். இதைத் தொடர்ந்து 'கணவனே கண்கண்ட தெய்வம்', 'மிஸ்ஸியம்மா', 'மாதர் குலமாணிககம்', 'பெண்ணின் பெருமை', 'வஞ்சிக்கோட்டை வாலிபன்', 'கல்யாணப்பரிசு', 'களத்தூர் கண்ணம்மா', 'தேன்நிலவு', 'கொஞ்சும் சலங்கை', 'சுமைதாங்கி', 'கற்பகம்', 'பணமா பாசமா', 'இருகோடுகள்', 'பூவா தலையா' உள்ளிட்ட படங்கள் இவரை புகழின் உச்சிக்கு கொண்டு சென்றன. ஜெமினியின் சொந்தத் தயாரிப் பில் உருவாகி சிறப்பாகப் பேசப்பட்ட படம். 'நான் அவனில்லை'.

அஞ்சலிதேவி, வைஜநதிமாலா, சாவித்திரி, சரோஜா தேவி, ஜெயலலிதா, சவுகார் ஜானகி, லலிதா, பானுமதி, தேவிகா உள்ளிட்ட அப்போது புகழ்பெற்றிருந்த நடிகைகளுடன் நடித்தவர்.


## சினிமாப் பிரவேசம்

புதுக்கோட்டையில் 1920 நவம்பர் 17இல் நடுத்தரக் குடும்பத்தில் பிறந்தவர் ஜெமினி. ஜெமினி தனது சொந்த ஊரில் பள்ளிப்படிப்பை முடிதது விட்டு மெட்ராஸ் கிறிஸ்டியன் கல்லூயில் பி.எஸ்.சி முடித்தார்.

அதே கல்லூரியில் பின்பு விரிவுரையாளராகப் பணிபுரிந்தார். 1940களில் அவர் ஜெமினி ஸ்டுடியோவில் சேர்ந்தார். ஜெமினி ஸ்டுடியோவின உரிமையாளர் எஸ்.எஸ் வாசனின் மனைவி பட்டமமாளுக்கு ஜெமினி ஒரு வழியில் உறவினர்.

இதனால் கமராவின் முன் நிற்பதற்கு அவருக்கு வாய்ப்புக் கிடைத்தது. அப்போது தயாரிப்பு நிர்வாகக் கட்டுப்பாடுகள் இயக்குநர் ராம்நாத் கையில் இருந்தது. கமரா டெஸ் எடுக்கப்பட்டது. ராம்நாத்துக்கு இவரது பளிர் முகம் பிடித்திருந்தாலும் அருகிலிருந்தவர்கள் முழுமையாக ஓகே சொல்லவில்லை. இதனால் அப்போது உடனடியாக வாய்ப்புக் கிடைக்கவில்லை.

'தாய் உள்ளம்' படத்தின் மூலம் வில்லனாக முதலில் ஜெமினி அறிமுகமானார். அதே ஆண்டில் 'மூன்று பிள்ளைகள்' படத்திலும் ஜெமினி நடித்தார். அப்போது, சிவாஜி நடித்து தமிழகத்தில் பரபரப்பாக 'பராசக்தி' ஓடிக்கொண்டிருந்ததால் 'மூன்று பிளைளைகள்' வெற்றி பெறவில்லை.



கற்பகம்

1953இல் முதல் முறையாக கதாநாயகனாக நடித்து வெளியான 'மனம்போல் மங்கல்யம்' படத்துக்குப் பின்னர் புகழ் பெறத் தொடங்கினார். 33வயதில் கதாநாயகனாக நடிக்கத் தொடங்கிய அவர் இப்படத்தில் இரட்டைவேடம் ஏற்றிருந்தார். இரண்டு கதாநாயகிகளில் ஒருவர் தெலுங்கு நடிகை சுரபி பாலசரஸ்வதி. மற்றொருவர் தென்னிந்திய திரைப்படத் துறையைக் கலக்கிக் கொண்டிருந்த சாவித்திரி.

ஜெமினி படத்தில் மட்டும் சாவித்திரியை காதலிக்கவில்லை. உண்மையான வாழ்க்கையிலும் அவரை நேசித்தார். மனம் போல் மங்கால்யத்தையும் சாவித்திரிக்கு ஜெமினி தந்தார். படமும் நூறு நாட்களுக்கு மேல் ஓடியது.

## காலத்தை வென்றவர்

தமிழ் மட்டுமல்லாது தெலுங்கு, மலையாளம், கன்னடம் ஹிந்தியிலும நடித்துள்ளார். தற்போதைய கதாநாயகர்களுடன் 'உன்னால் முடியும் தம்பி', 'பொன்மனச் செல்வன்' உள்ளிட்ட படங்களில் நடித்தார். 'ஒளவை சணமுகி'யில் காதல் இளவரசன் கமலுடன் காதல் மன்னனின் நடிப்பு ரசிகர்களின் மனதில் இடம்பிடித்தது.

ஜெமினி அதிகமாகப் புத்தகங்கள் படிப்பார். நான்றாக எழுதுவார். நல்ல ஞாபக சக்தி கொண்டவர். நகைச் சுவையாக பேசுவார்.

அமெரிக்கா, மலேசியா, இலங்கை உள்ளிட்ட பல்வேறு நாடுகளுக்குச் சென்றவர். தனது வசிகரத் தோற்றம் மற்றும் நடிப்புத் திறமையால் தனது காலத்தில் பெண் ரசிகர்களின் உள்ளங்களைக் கொள்ளை கொண்டவர்.

கலைமாமணி, பத்மசிறி, சங்கீத நாடக சங்க விருது உள்ளிட்ட பலவேறு விருதுகளையும் பாராட்டுகளையும் பெற்றவர்.

## வாழ்க்கையுடன் இணைந்த சினிமா

ஜெமினி நடித்த முதல் படம் 'மிஸ் மாலினி'. 'இரு கோடுகள்' படத்தில் இரு மனைவிகளுக்கிடையில் மாட்டிக்கொண்டு உறவைச் சொல்லவும் முடியாமல் விழுங்கவும் முடியாமல் தத்தளித்த கணவனாக நடித்தார். அது அவரது சொந்த வாழ்க்கையைப் பிரதிபலிப்பதாக அமைந்தது.

'நான் அவனில்லை' படத்தில் பத்து கதாபாத்திரங்களில் அவர் நடித்தார். 'மாயாஜாலப்' படம் எதுவானாலும் மற்றவர்களை அசத்தும் நடிகர் அவர் என்று வைஜயந்தி மாலா கூறுவார்.

'காலங்களில் அவள் வசந்தம்' 'மயக்கமா கலக்கமா', 'துள்ளித்திருந்த பொண்ணொன்று', 'நிலவே என்னிடம் நெருங்காதே' உள்ளிட்ட ஏராளமான ப.ப.ஸ்ரீனிவாஸ் பாடிய பாடல்கள் ஜெமினிக்கு புகழ் சேர்த்தன. 'கொஞ்சும் சலங்கை' படத்தில் 'சிங்காரவேலனே தேவா' என்ற பாடலை ஜானகி பாடியிருந்தார். நாதஸ்வரம் வாசித்தவர் காருகுறிச்சி அருணாச்சலம். படத்தில் வித்தியாசம் தெரியாமல் ஜெமினி நாதஸ்வரம் வாசிப்பார்.

'பாக்யலட்சுமி' படத்தில் 'மாலைப் பொழுதின் மயக்கத்திலே நான் கனவு கண்டேன் தோழி' பாடலில் தொட்டிலில் இருந்த குழந்தை குட்டிபத்மினி. அதன் பின்னர் 'காத்திருந்த கண்கள்' 'பாசமலர்' உள்ளிட்ட படங்களிலும் குட்டிப் பத்மினி ஜெமினியுடன் நடித்திருக்கிறார்.



நான்கு தலைமுறை நடிகர் ஜெமினிகணேசன்...

ஜெமினி நடித்த 'வெள்ளிவிழா' கண்ட படங்கள் மூன்று. அவை, 'கல்யாணப்பரிசு', 'பாச மலர்' மற்றும் 'பாவ மன்னிப்பு'.

'மர்மவீரன்', 'சதி சுமதி', 'நூற்றுக்கு நூறு, 'அன்னை வேளாங்கன்னி' மற்றும் 'ஜசஸ்' ஆகிய படங்களில் கௌரவ வேடத்தில் நடித்துள்ளார்.


ஜெமினி நடித்த 'இருகோடுகள்', 'காவியத்தலைவி', 'நூற்றுக் குநூறு' உள்ளிட்ட படங்கள இயக்குநர் பாலச்சந்தரின் வெற்றிப் படங்களாயின. இதனால் ஜெமினி ரசிகர்கள் பாலச்சந்தருக்கு இயக்குநர் சிகரம் என்ற பட்டத்தை அளித்தாக்ள்.

எம்.ஜி.ஆர் மற்றும் சிவாஜி நடிப்புத் துறையிலிருந்து அரசியல்கதுச் சென்றார்கள. ஆனால் ஜெமினி அரசியல் பக்கம் தலைகாட்டவேயில்லை. மறைந்த பிரதமர் ராஜீவ் இவருக்கு ராஜ்ய சபா எம்பி பதவி தர முன்வந்த போதிலும் கூட அவர் அதை மறுத்துவிட்டார். ரியல் எஸ்டேட்டில் ஜெமினி ஆர்வம் காட்டினார். சென்னை, ஊட்டி கொடைக்கானலில் அவர் நிறைய முதலீடு செய்தார்.

## நூறுநாள் ஓடிய படங்கள்

1947இல் 'மிஸ் மாலினி' தொடங்கி 1970 இல் 'இருகோடுகள்' வரை இவர் நடித்த 25 படங்கள் நூறு நாட்களுக்கு மேல் ஓடி சாதனை படைத்தன.

'மிஸ் மாலினி', 'தாயுள்ளம', 'ஒளவையார்', 'மனம்போல் மாங்கல்யம்', 'காலம்மாறிப்போச்சு', 'பெண்ணின் பெருமை', 'பிரேமபாசம்', 'கற்புக்கரசி' 'மாயாபஜார்', 'மாதர் குல மாணிக்கம்', 'பதிபக்தி' 'களத்தூர் கண்ணம்மா', 'வீரபாண்டிய கட் டபொம்மன்', 'கொஞ்சும் சலங்கை', 'பாத காணிக்கை', 'கற்பகம்', 'வல்லவனுக்கு வல்லவன்', 'ராமு', 'முகராசி', 'சித்தி', 'சரஸ்வதி சபதம்', 'கந்தன் கருணை', 'பணமா பாசமா', 'பூவா தலையா' மற்றும் 'இரு கோடுகள்'.



ரசிகர்களின் மனதை தொட்ட பாசமலர் படத்தில் சிவாஜி, சாவித்திரியுடன்.

## விருது பெற்ற படங்கள்



ராமு

1968இன் சிறந்த படமாக ஜெமினி நடித்த 'தாமரை நெஞ்சம்' தமிழக அரசால் தேர்வு செய்யப்பட்டது.

1970 இல் 'காவியத்தலைவி' படத்தில் அவர் நடிப்புக்காக சிறந்த நடிகர் விருது பெற்றார். சிவாஜியுடன் இவர் நடித்த 'வீரபாண்டிய கட்டப்பொம்மன்' 1959இல் மாநில அளவில் சிறந்த படமாக தெரிவுசெயயப்பட்டது.

1960இல் 'பார்த்திபன் கனவு' மாநில அரசின் வெள்ளிப்பதக்கம் பெற்றது. அதேயாண்டில் 'களத்தூர் கண்ணாம்மா'வுக்கு மாநில சான்றிதழ் வழங்கப்பட்டது.

1961இல் 'பாவ மன்னிப்பு' படத்துக்கு அகில இந்திய சான்றிதழ் கிடைத்தது. 1966 'ராமு' மற்றும் இரு கோடுகள் படங்களுக்கு வெள்ளித் தாமரை விருதை மாநில அரசு வழங்கியது.

30ஆவது வயதில் ஆரம்பித்து 84 வயது வரை தொடர்ந்த அவரது திரைப்பட வாழ்க்கையை எவராலும இலகுவில் மறந்துவிட முடியாது.

* * *



7 மகள்களுடன்...

# இன்று ஒரு தகவல்

## தந்தை சொல்மிக்க மந்திரம் இல்லை

ஆத்தி சூடி, கொன்றை வேந்தன், போன்ற நீதி நூல்கள் சிறுவர்களுக்கு ஒழுங்காக கற்பிக்கப்பட்ட ஒரு காலம் தமிழ் கூறும் நல்லுலகு எங்கும் காணப்பட்டது.

எனவே இளம் பராயத்தில் பிஞ்சு மனங்களில் நற் கருத்துக்கள் ஆழமாகப் பதிந்து வாழ்க்கையை அர்த்தமுள்ளதாக, பிறருக்குப் பயன்படத்தக்க, சமூக உயர் விழுமியங்களை ஏற்படுத்துவனவாக விளங்கின. கல்வியின் முழுமையை முழுமையாக மாணவர்களுக்கு வழங்கின.

ஆனால் இன்று எதிலுமே போட்டி, அவசரம், பரபரப்பு மேலோங்கிக் காணப்படுகிறது. ஆண்டு-05 புலமைப்பரிசில் பரீட்சை முதல் பல்கலைக்கழக தெரிவுவரை எல்லாவற்றிலுமே போட்டி. ஆனால் முடிவு என்ன என்றால் எதுவுமே இல்லை போட்டி, பொறாமை, அராஜகங்கள், சுயநல மனப்பான்மை, வன்மைக் குணங்கள் பெருகிவிட்டன.

அவ்வகையில் சிறு வயதில் கற்றுக்கொண்ட ஓர் சிறு கதையை இங்கு நோக்குதல் பொருத்தமானது. இரண்டாம் உலக மகா யுத்தம் நடைபெற்ற காலம். கப்பல் ஒன்றில் மாலுமிகள் பலர் சேர்ந்து பயணம் செய்கிறார்கள். அவர்களுடன் மாலுமி ஒருவனுடைய மகனும் பயணம் செய்கின்றான்.

அவ்வேளையில் குறித்த மாலுமி தனது மகனிடம் நான்வரும்வரை இவ்விடத்தைவிட்டு அகலக்கூடாது எனக் கூறிவிட்டு கப்பலின் வேறு தளத்திற்கு சென்றுவிடுகிறார்.

சிறிது நேரத்தில் குறிப்பிட்ட கப்பல்மீது யுத்த விமானங்கள் குண்டு வீசி அக் கப்பல் தீப்பற்றி எரிகிறது. அச்சமயத்தில் கப்பலிலிருந்து தப்பி ஓடுமாறு குறிப்பிட்ட அச் சிறுவனுக்கு ஏனைய மாலுமிகள் கூறுகின்றனர். ஆனால் குறிப்பிட்ட சிறுவனோ எனது தந்தை தான் வரும்வரை இவ்விடத்தைவிட்டு நகரக்கூடாது எனக் கூறியுள்ளார். எனவே நான் இவ்விடத்தைவிட்டு நகரமாட்டேன் எனக் கூறினான்.

சிலமணி நேரத்தில் கப்பலுடன் சேர்ந்து அச்சிறுவனும் மரணத்தை தழுவினான் என்றவாறு அக்கதை உள்ளது.

தனது தந்தை இட்ட கட்டளையை எந்தக்கட்டத்திலும் நிறைவேற்றியே தீரவேண்டும் தந்தையின் சொல்லை 'மந்திரம் போல் காக்கவேண்டும் என்பதனை இக்கதை உணர்த்துகிறது.

இதேபோல இராமாயணத்தில் ஓர் சம்பவம் தசரதனின் விருப்பத்திற்கு அமைவாக நீ 'அரசுரிமையை துறந்து 14ஆண்டுகள் வனவாசம் செல்லவேண்டும். பரதன் நாடாள வேண்டும் எனச் சிற்றன்னையாகிய கைகேயி இராமனுக்கு உத்திரவிடுகின்றார்.

தந்தையின் உத்தரவு அதுவனால் அதனை நான் நிறைவேற்றுவேன் என முகமலர்ச்சியோடு கூறிவிட்டு மனைவி சீதையுடனும், தம்பி இலக்குமனனுடனும் காடேகிய இராமனின் கதையையும் காண்கின்றோம்.

ஆனால் இன்று இப்படி எத்தனை இராமர்களை நாம் காணமுடிகிறது. எனவே உயர் கருத்துக்களை கொண்ட அறநூல்கருத்துக்களை உள்வாங்கி வாழ்க்கையை அர்த்தமுள்ளதாக்க வேண்டியது. நமது கடமையாகிறது. அல்லாவிடில் "சுனாமி" அலைபோன்ற இயற்கையின் சீற்றத்திற்கு வகை சொல்லியே ஆகவேண்டும்.

*தீர்வை யூரான்*

## மாந்தை கிழக்கு பிரதேசத்தை அபிவிருத்தி செய்ய நிதி ஒதுக்கீடு

மாந்தை கிழக்கு பிரதேசத்துக்கு 2005ஆம் ஆண்டுக்கான முன் ஏற்பாட்டு திட்ட நிதியாக ரூபா, 28 இலட்சம் ரூபா அபிவிருத்தி வேலைகளுக்கென ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

இந்நிதிமூலம் கரும்புளியானில் 11இலட்சம் செலவில் பனங்காமம் பல.நோ.கூ.சங்கத்தின் மாதிரி கடைத்தொகுதியொன்றும் 5இலட்சம் ரூபா செலவில் பனங்காமம் வீதியும், 2இலட்சம் ரூபா செலவில் பாண்டியன்குளம்- நட்டான்கண்டல் வீதியும் 10 இலட்சம் ரூபா செலவில் நட்டான்கண்டல் கிராட்டிகுளம் வீதியும் புனரமைப்புச் செய்யப்பட இருக்கின்றது.

மாந்தை கிழக்கு பிரதேசத்தின் வீதிகள் பல வருடங்களாக புனரமைக்கப்படாததால் அவை சம்மந்தமான பல முன் மொழிவுகள் சமர்ப்பிக்கப்படவுள்ளதாக மாந்தை கிழக்கு பிரதேச செயலாளர் தெரிவித்துள்ளார்.

(து-128)

## நிவாரணப் பொருட்களை பதுக்கிய நபருக்கு பிணை வழங்க மறுப்பு

பாதிக்கப்பட்ட மக்களுக்கு விநியோகிப்பதற்காகக் கூட்டுறவுச் சங்கம் ஒன்றுக்கு வழங்கபபட்ட உணவுப் பொருட்களை பதுக்கி வைத்த ஒருவருக்கு பிணை மறுக்கப்பட்டுள்ளது.

இக் குற்றத்திற்காக ஆறுமாதக் கடூழிய சிறைத் தண்டணை விதிக்கப்பட்ட கோமரங்கடவல கூட்டுறவுச்சங்கத்தைச் சேர்ந்த எஸ்.பி குணதிலக, தண்டனையை எதிர்த்து மேன்முறையீடு செய்திருந்தார்.

இதைக் காரணம் காட்டி அவரை பிணையில் விடுவிக்கக்கோரி தாக்கல் செய்யப்பட்ட பிணை மனுவை திருகோணமலை நீதவான் மாணிக்கவாசகர் கணேசராஜா நிராகரித்தார். தனது தீர்ப்பில் நீதவான் கூறியதாவது,

இந்நீதிமன்ற நியாயாதிக்க எல்லைக்குள்ளும் மோசடிகள் சம்மந்தமாக நடக்கின்ற சம்பவங்கள் குறித்து மன்று மிகுந்த விழிப்புணர்வுடன் உள்ளது. நடக்கும் சம்பவங்கள் குறித்தும் கண்ணிருந்தும் குருடர்களாக, திருந்தும் செவிடர்களாக வாயிருந்தும் ஊமை போல இருக்க இந்த மன்று விரும்பவில்லை.

தன் வயிற்றுப் பாட்டுக்காக அரச சார்பான நிறுவனங்களிருந்து உணவுப் பொருட்களை எடுத்துச் சென்றவர்கள், பொதுச்சொத்துக்கள் கட்டளைச் சட்டத்தின் கீழ் குற்றம் சாட்டப்பட்டு இந்நீதி மன்றத்தின் . கரங்கள் இறுக்கப்பட்ட நிலையில் பிணை வழங்கப்படாமல் பல மாதக்கணக்கில் ஏழை, எளியவர்கள் சிறையில் வாடுவதை மன்று நேரடியாகவே கண்டு கொண்டிருக்கின்றது.

ஏழைக்கு ஒரு நீதியும், செல்வாக்குள்ளவர்களுக்கு ஒரு நீதியும் வழங்கப்படுமானால் மன்றின் மீது மக்கள் நம்பிக்கை இழந்து விடும் அபாயத்தை மன்று எதிர்நோக்க வேண்டி ஏற்படும்.

இந்த அவநம்பிக்கையைப் போக்க வேண்டிய பாரிய பொறுப்பு மன்றுக்கு உண்டு. தன் வயிற்றுப் பாட்டுக்காகக் களவெடுப்பவனுக்கும் மற்றவர்களின் வயிற்றில் அடித்து மோசடி செய்பவனுக்கும் இடையில் பாரிய இடைவெளி உண்டு என்பதை மன்று தெளிவுபடுத்த விரும்புகின்றது. வேலியே பயிரை மேய்வது போன்ற நிலை பெருகிச் செல்வதை மன்று விரும்பவில்லை.

இச் செயல்கள் குறித்து கடுமையான அணுகுமுறையே மன்று கொண்டிருக்க விரும்புகின்றது. எனவே குற்றத்தின் பாரதூரத்தன்மை பொறுப்பு வாய்ந்த உத்தியோகத்தராக உள்ள எதிரியின் பொறுப்பற்ற செயல் என்பவற்றை மன்று கருத்திற் கொண்டு எதிரிக்கு பிணை வழங்குவ்து உகந்ததல்ல என்று மன்று தீர்மானிக்கின்றது.

மேற்கூறிய காரணங்களை அடிப்படையாகக் கொண்டு மன்று இப் பிணை விண்ணப்பத்தை நிராகரிக்கின்றது என்றார் நீதவான் கணேசராஜா.(க)

## குடிநீர் விநியோகத்தை விஸ்தரிக்க மக்களின் ஒத்துழைப்பு அவசியம்

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாநகரசபையினால் குடிநீர் விநியோகம் விரிவுபடுத்தப்படவுள்ளது. தற்போது யாழ். மாநகரசபையினால் 460 குடும்பங்களுக்கு தனித்தனியாக குடிநீர் விநியோகிக்கப்பட்டு வருகிறது.

இதுபோன்று கரையோரப் பகுதிகளில் ஐந்நூறுக்கு மேற்பட்ட பொது நீர்க்குழாய்கள் பொருத்தப்பட்டு குடிநீர் வழங்கப்பட்டு வருகின்றது.

குடிநீர் விநியோகத்தை மேலும் விரிவாக்கம் செய்வதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகிறது.

தனித்தனியாக குடிநீர் விநியோகம் வழங்குவதை நாநூற்று அறுபதில் இருந்து ஆயிரத்து நானுறு ஆக அதிகரிப்பதற்கும் கரையோரப் பகுதிகளில் பொது நீர்க்குழாய்கள் பொருத்தப்பட்டு குடிநீர் வழங்குவதை மேலும் அதிகரிப்பது தொடர்பாகவும் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாக யாழ்.மாநகரசபை ஆணையாளர் குணராசா தெரிவித்துள்ளார்.

மேலும் அவர் கருத்துத் தெரிவிக்கையில் இக் குடிநீர் விநியோகத்தை விரிவாக்கம் செய்வதற்கு போதிய நன்னீர் உள்ள போதும் மக்கள் ஒத்துழைக்காததனால் இக் குடிநீர் விநியோகத்தை வழங்குவதில் பிரச்சினைகளை எதிர்நோக்க வேண்டியுள்தாக தெரிவித்தார்.

மக்களது நன்மைகருதி கரையோரப் பகுதிகளின் பொது இடங்களில் நீர்க்குழாய்கள் பொருத்தப்பட்டு இலவசமாக நீர் வழங்கப்பட்டு வருகின்றோம். ஆனால் நீர்க்குழாய்கள் உடைக்கப்படுவது தொடர்பாகவும் நீர் ஓடினால் அதுபற்றி தங்களுக்கு அறியத்தருவது தொடர்பாகவும் அப்பகுதி மக்களோ அப்பகுதி சனசமூக நிலையங்களோ பொது நிறுவனங்களோ பொறுப்புணர்வுடன் செயற்படாததினால் தாம் பல பிரச்சினைகளை எதிர்நோக்கி வருவதாகவும் தெரிவித்துள்ளார்.

கடந்த சில நாட்களாக புங்கன்குள வீதியில் பொருத்தப்பட்டுள்ள குடிநீர் குழாய் விஷமிகளால் வேண்டுமென்றே நான்கு தடவைகள் உடைக்கப்பட்டுள்ளதாகவும் கூறினார். எனவே குடிநீர் விநியோகத்தை மேலும் விரிவாக்கம் செய்ய வேண்டுமனால் மக்கள் ஒத்துழைக்க வேண்டும் என யாழ்.மாநகரசபை ஆணையாளர் கேட்டுள்ளார்.

(க-19)

## பாதிப்புற்றோரின் பிரச்சினைகளுக்கு தீர்வுகாண நாம் தயாராகவுள்ளோம்

### பாராளுமன்ற ஆலாட்சி அதிகாரி தெரிவிப்பு

கடல் பேரலைகளினால் பாதிக்கப்பட்டவர்களின் பிரச்சினைகளுக்கு ஏனைய அதிகாரிகளினாலும் அமைப்புக்களினாலும் தீர்வு காணப்படாமலிருந்தால் அப் பிரச்சினைகள் சம்பந்தமாக உதவுவதற்கு தாம் தயாராக இருப்பதாக பாராளுமன்ற ஆலாட்சி அதிகாரி தெரிவித்துள்ளார்.

நிர்வாகம் சம்பந்தமான பாராளுமன்ற ஆணையாளர் கலாநிதி ஆர்.பி.ரணராஜா இது தொடர்பாக கருத்துத் தெரிவிக்கையில்,

நிவாரணப் பொருட்கள், நிதிஉதவி என்பன பெற்றுக்கொள்ளப்படாமல் இருந்தால் அவை சம்பந்தமாகவும் ஆலாட்சி அதிகாரிக்கு முறைப்பாடு செய்ய முடியும் என்றும் தெரிவித்தார்.

அடையாள அட்டைகள், பிறப்பு மற்றும் இறப்புச் சான்றிதழ்கள் என்பனவற்றைப் பெற்றுக் கொள்வதில் எதிர்நோக்கும் பிரச்சினைகள் பற்றியும் அவரிடம் முறைப்பாடு செய்ய முடியும்.

சம்பந்தப்பட்ட அரச திணைக்களங்களுடன் விசாரணைகள் நடத்தியதைத் தொடர்ந்து பிரச்சினைகளுக்கு உடனடி தீர்வு காண்பதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் எனவும் தெரிவித்தார்.

மேற்குறித்த பிரச்சினைகள் ஏதேனும் இருப்பின் கொழும் 3, காலி வீதி 594/3ஆம் இலக்கத்தில் அமைந்துள்ள பாராளுமன்ற ஆலாட்சி அதிகாரியின் அலுவலகத்திற்கு அறியத்தரலாம். (க-19)

## பரிசளிப்பு விழா

(பொன்னாலை)

வடக்கு-கிழக்கு மாகாண உள்ளூராட்சி சபைகளுக்கிடையே கடந்த 2003இல் நடத்தப்பட்ட உள்ளூராட்சிவார செயற்றிறன் போட்டிகளில் வெற்றிபெற்ற சபைகளுக்கான பரிசளிப்பு விழா எதிர்வரும் 31ஆம் திகதி வியாழக்கிழமை நடைபெறவுள்ளது.

திருகோணமலை மாகாண பிரதம செயலாளர் அலுவலகத்தின் கேட்போர் கூடத்தில் காலை 11மணிக்கு நடைபெறவிருக்கும் இந்நிகழ்வில், பிரதம அதிதியாக மாகாண ஆளுநர் டிரோன் பெர்னாண்டோ கலந்துகொள்ளவுள்ளார்.


இந்நிகழ்வில், வடக்கு-கிழக்கிலுள்ள சகல உள்ளூராட்சி சபைகளின் செயலாளர்களையும் கலந்துகொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளது.(க-49)

# மீள்பார்வை

## பிரியாணி விஜேசேகர எழுதிய

# இலங்கையில் பாராளுமன்ற வழக்கம்

### (தமிழாக்கம் : ஆர்.எஸ். வேதநாயகம்) 16



### அத்தியாயம் VI

அவ்வாறு இடைநிறுத்திவைக்கப்படும் உறுப்பினர்கள் பாராளுமன்ற வளவெல்லையிலிருந்து உடனடியாக வெளியேற வேண்டுமென்பதுடன் எல்லாக் குழுக்களிலிருந்தும் தடைசெய்யப்பட்டிருக்கவும் வேண்டும். பாராளுமன்ற வளவெல்லையென்பது அதன் கட்டிடங்களையும் தோட்டங்களையும் அதனை அணுகுவதற்கான பாதைகளையும் உள்ளடக்கும். பாராளுமன்றத்தில் கடும் குழப்ப நிலை ஏற்படுமிடத்து சபாநாயகர் அமர்வை ஒரு சில நிமிடங்களுக்கு இடை நிறுத்திவைக்கலாம். மீண்டும் சபை கூடுகின்ற போதும் குழப்பம் தொடருமாயின் அவர் வினா விடுக்காமலேயே அடுத்த கூட்ட நாள்வரை சபையை ஒத்திவைக்கலாம்.

***நீக்கங்கள்***

இழுக்கான அல்லது வெறுக்கத்தக்க சொற்களைப் பயன்படுத்திய ஓர் உறுப்பினரிடம் அவற்றை மீளப் பெறுமாறு அத்துடன் அல்லது அவற்றுக்காக மன்னிப்புக் கோருமாறு சபாநாயகர் கோரலாம். அத்தகைய வெறுக்கத்தக்க வார்த்தைகளையும் நிலையியற் கட்டளை 78ஐ அல்லது 84 ஐ மீறுகின்ற வகையில் சொல்லப்பட்ட எதனையும் அதிகார அறிக்கையிலிருந்து (ஹன்சாட்) நீக்கிவிடுவதற்கான உரிமையும் சபாநாயகருக்குண்டு. வெறுக்கத்தக்க சொற்கள் பயன்படுத்தப்படுகின்ற போது சபாநாயகர் உடனடியாக அத்தகைய சொற்களை நீக்கிவிடும் படி அறிவிக்கலாம். அவ்வாறான ஒரு சந்தர்ப்பத்தில் அத்தகைய நீக்கங்கள் பற்றி பாராளுமன்றத்துக்கு அறிவிப்பதற்கு மேலதிக அறிவித்தலெதுவும் தேவையில்லை. தம்மைப் பற்றிய தனிப்பட்ட குறிப்புரைகளையும் சாட்டிக் கூறியவற்றையும் நீக்கிவிட வேண்டுமென்ற ஓர் உறுப்பினரின் கோரிக்கையையும் சபாநாயகர் கவனத்திற் கொள்ளலாம். (சபை நடவடிக்கைகளின் போது நீக்கப்படுபவை தவிர) அத்தகைய நீக்கங்கள் பற்றிப் பாராளுமன்றத்துக்கு அவர் அறிவிக்க வேண்டுமென எதிர்பார்க்கப்படினும் அடிக்கடி அத்தகைய நீக்கங்கள் இடம் பெறுவதனால் இவ்வழக்கம் கடைப்பிடிக்கப்படுவதில்லை. ஒரு விவாதத்தின் ஏதேனும் பகுதியை அறிக்கையிட வேண்டாமெனப் பத்திரிகையாளருக்குச் சபாநாயகர் அல்லது தலைமை தாங்கும் அலுவலர் கூறுவாராயின் அவர்கள் அதனைப் பின்பற்ற வேண்டும். அவ்வாறு செய்யத்தவறுதல் சிறப்புரிமையை மீறியதாக அமையும்.

குறிப்பிட்ட ஏதேனும் சொல் பாராளுமன்றப் பண்புக்கு ஒவ்வாததா என்பதைச் சபாநாயகர் தான் தீர்மானிக்க வேண்டும். சபாநாயகரால் நீக்கப்பட்ட எதையும் பத்திரிகைகளில் அறிக்கை இடக்கூடாது. எனினும் ஹன்சாட் வெளிவருவதற்கு முன்னர் பத்திரிகையில் பிரசுரமான எதுவும் தண்டனைக்குரியதாகாது.

***தகாத நோக்கங் கற்பித்தல்***

உறுப்பினரெவரும் இன்னுமோர் உறுப்பினர் மீது தகாத நோக்கம் கற்பிக்கக்கூடாது. அவ்வாறு செய்யப்பட்டால் பாதிக்கப்பட்ட உறுப்பினர் சபையில் பிரேரணை எதுவுமின்றித் தனிப்பட்ட விளக்கமளிக்க உரித்துடையவராவார். அத்தகைய விளக்கங்கள் விவாதிக்கப்படமுடியாதவை. விவாதிக்கப்படும் விடயத்தில் தனிப்பட்ட அக்கறையுடைய உறுப்பினரெவரும் அவ்விவாதத்தில் தீவிரமாகப் பங்குபற்றுவதிலிருந்து தவிர்த்துக் கொள்ளவேண்டும்.

***ஒழுங்காசாரம்***

உரையாற்றாத உறுப்பினர்கள் அமைதியைப் பேண வேண்டுமென்றும் பண்புடன் நடந்து கொள்ள வேண்டுமென்றும் சபாமண்டபத்தினுள் குறுக்கே போவதை தவிர்க்கவேண்டுமென்பதும் சபையின் முன்னிருக்கும் விடயத்துக்குத் தொடர்பற்ற செய்திப் பத்திரிகைகளையும் நூல்களையும் வாசிப்பதைத் தவிர்க்க வேண்டுமென்றும் எதிர்பார்க்கப்படுகின்றனர். கடந்த அண்மைக் காலத்தில் சபாநாயகர் சபாமண்டபத்தினுள் உறுப்பினர்கள் செலூலர் தொலைபேசிகளையும் ஒலிப்பதிவுக் கருவிகளையும் பயன்படுத்துவதைத் தடைசெய்துள்ளார். தமது வாதத்தை விளக்கிக் காட்டுவதற்கு செருப்புகள், பாண், போத்தல்கள், உணவுப் பொருட்கள் போன்றவற்றை உறுப்பினர்கள் சபைக்குக் கொண்டுவருவதையும் அவர் விரும்பத்தக்கதாகக் கருதவில்லை.சுவரொட்டிகளைப் பகட்டாகக் காட்டுவது இடம்பெறுகின்ற போதிலும் அதிலும் ஊக்கங்காட்டப்படுவதில்லை. சபாமண்டபத்தில் புகைத்தல் தடைசெய்யப்பட்டுள்ளது.

சபாநாயகர் பிரவேசிக்கின்றபோதும் பிரதிச் சபாநாயகரோ குழுக்களின் பிரதித் தவிசாளரோ. தவிசாளர் குழாத்தின் ஓர் உறுப்பினரோ அக்கிராசனத்துக்குச் செல்கின்ற போதும் எல்லா உறுப்பினர்களும் எழுந்து நிற்கவேண்டுமென்பதுடன் அவ்வேளையில் உரையாற்றிக் கொண்டிருக்கும் உறுப்பினரும் தமது பேச்சை நிறுத்த வேண்டும்.

உறுப்பினர்கள் ஓர் ஒழுங்குப் பிரச்சினையின் பேரிலன்றி அல்லது தெளிவுபடுத்தும்படி கோரியன்றிச் சபையின் நடவடிக்கைகளில் குறுக்கீடு செய்யப்படக்கூடாது.

கூட்ட அமர்வின் போது உறுப்பினர்கள் சபைக்குக் குறுக்காகச் செல்லக் கூடாது. உரையாற்றும் போது ஓர் உறுப்பினர் தமக்கு ஒதுக்கப்பட்ட இடத்திலிருந்து அக்கிராசனரை நோக்கிப் பேச வேண்டும் .அக்கிராசனரை நோக்கி உரையாற்றவேண்டுமென்ற இவ்வழக்கம் அரிதாவே பின்பற்றப்படுகின்றது. உறுப்பினரொருவர் உடை ஒழுக்கத்துக்கிணங்க முறையாக உடுத்திருக்கவேண்டும்.

ஆவணங்களும் கடிதங்களும் சபாநாயகரின் அங்கீகாரத்துடன் மட்டும் சபாமண்டபத்தில் பகிர்ந் தளிக்கப்படலாம்.

***ஒழுங்குப் பிரச்சினைகள் (நிலையியற் கட்டளை 71 (1)***

நடைமுறை ஒழுங்கீனமொன்று இடம்பெற்றுள்ளதெனக் கருதுகின்ற உறுப்பினர் எவரும் அதனை உடனடியாக அக்கிராசனரின் கவனத்துக்குக் கொண்டுவருவதற்கு உரித்துடையவராவார். அவ்வாறு ஒழுங்குப் பிரச்சினை எழுப்பப்படுகின்றவேளையில் உரையாற்றிக்கொண்டிருக்கும் உறுப்பினர் தமது பேச்சை நிறுத்தி அதற்கு இடமளிக்கவேண்டும்.சபாநாயகர் அல்லது தலைமை தாங்கும் அலுவலர் அப்பிரச்சினையைத் தீர்த்தவுடன் உறுப்பினர் தமது பேச்சை மீண்டும் தொடரலாம்.

ஓர் ஒழுங்குப் பிரச்சினை இன்றியமையாத வகையில் நடைமுறை விதிகள் மரபு மற்றும் சபையில் அலுவலை நடத்துதல் தொடர்பான பொருள்விளக்கத்தைக் குறிப்பிடுவதாக இருக்கவேண்டும்.எழுப்பப்பட்ட விடயம் ஓர் ஒழுங்குப்பிரச்சினைதானா இல்லையாவென்பதைச் சபாநாயகர் மட்டுமே தீர்மானிக்க முடியும்.

ஒழுங்குப்பிரச்சினையொன்றை எழுப்புவதற்கான உரிமை ஓர் உறுப்பினருக்கு வழங்கப்பட்டுள்ள அருமதிப்பான ஓர் உரிமையென்பதால் வெறுமனே நடவடிக்கைகளை இடைமறிப்பதற்கு அல்லது ஒரு குழப்பத்தை ஏற்படுத்துவதற்கு அதனைப் பயன்படுத்தலாகாது. அது இன்றியமையாதவாறு நடைமுறை தொடர்பானதாக இருக்க வேண்டுமேயன்றி தன்னிலை வாதங்கள் தொடர்பானவையாகவல்ல. தகவல்களைத் தேடுவதற்கு அதனைப் பயன்படுத்தக்கூடாது. சபாநாயகர் தீர்ப்பொன்றை வழங்குகின்றபோது அல்லது வாக்கெடுப்பொன்று நடைபெறுகின்றபோது ஓர் ஒழுங்குப் பிரச்சினையை எழுப்பக்கூடாது. ஒழுங்குப் பிரச்சினையொன்றை எழுப்புகின்ற போது அதனை எழுப்புகின்ற உறுப்பினர் மீறப்பட்டதாகச் சார்த்துகின்ற அரசியலமைப்பின் ஏற்பாட்டை நிலையியற் கட்டளையை. மரபை அல்லது தீர்ப்பை எடுத்துக்காட்டுதல் பொருத்தமானதாகும். (தொடரும்)

---

பாலியல் வல்லுறவு முயற்சி

# நரேந்திரனை நீதிமன்றில் ஆஜராகுமாறு உத்தரவு!

(கொழும்பு)

அமைச்சர் ரோகித போகல்லாகமவின் மனைவி தீப்தி போகல்லாகமவை பாலியல் வல்லுறவுக்குள்ளாக்க முயற்சித்ததாக தொடரப்பட்ட வழக்கில் பிரபல இருதய சத்திர சிகிச்சை நிபுணரான எஸ்.நரேந்திரனை நீதிமன்றில் ஆஜராகுமாறு உத்தரவிடப்பட்டுள்ளது.

மே மாதம் 6ஆம் திகதியன்று நீதிமன்ற விசாரணைக்கு வரவேண்டும் என்று கொழும்பு கூடுதல் நீதிமன்றம் நேற்று முன்தினம் இவ் உத்தரவை பிறப்பித்தது.

இருதய சத்திர சிகிச்சை நிபுணர் வைத்தியர் எஸ்.நரேந்திரனைக் கொலை செய்ய முயன்றதாக தீப்தி போகல்லாகம மீது நரேந்திரனும் தன்னை பாலியல் வல்லுறவுக்குள்ளாக்க நரேந்திரன் முயற்சித்தார் என்று தீப்தியும் பொலிஸாரிடம் புகார் அளித்தனர்.

முன்னைய விசாரணையின் போது நரேந்திரன் மீது வழக்குத் தொடர வேண்டாமென்று சட்டமா அதிபர் ஆலோசனை தெரிவித்துள்ளதாகவும் பொலிஸார் நீதிமன்றத்தின் கவனத்துக்குக் கொண்டுசென்றனர்.

இதையடுத்து அக்குற்றச்சாட்டிலிருந்து வைத்தியர் நரேந்திரன் விடுவிக்கப்பட்டார். இதை எதிர்த்து தீப்தி போகல்லாகம மேன்முறையீடு செய்தார். இதனையடுத்தே நரேந்திரனுக்கு தற்போது இந்த உத்தரவு அனுப்பிவைக்கப்பட்டுள்ளது. (க)

# வேலை நிறுத்தப் போராட்டம் இடைநிறுத்தப்பட்டுள்ளது

(யாழ்ப்பாணம்)

யாழ்பல்கலைக்கழக துணைவேந்தரது எழுத்து மூல உறுதி மொழியை அடுத்து யாழ். பல்கலைக்கழக நிறைவேற்று அலுவலர்களது வேலை நிறுத்தம் தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்டுள்ளது.

சேவையிலிருந்து இடைநிறுத்தப்பட்ட பல்கலைக்கழக பதிவாளரை மீண்டும் பதவியில் இணைத்துக் கொள்ள பேரவையால் மேற்கொள்ளப்பட்ட தீர்மானத்தை இதுவரை அமுல்செய்யாமல் துணைவேந்தர் இழுத்தடிப்பதைக் கண்டித்தும் பேரவைத் தீர்மானத்தை உடனடியாக அமுலாக்கக்கோரியும், யாழ்.பல்கலைக்கழக நிறைவேற்று அலுவலர்கள் கடந்த 19ஆம் திகதி முதல் வேலைநிறுத்தத்தில் ஈடுபடுவதற்குத் தீர்மானித்திருந்தார்கள். ஆனால் கடந்த ஞாயிற்றுக்கிழமை 9.00மணிக்கு யாழ். பல்கலைக்கழக துணைவேந்தர் சு.மோகனதாஸ் நிறைவேற்று அலுவலர்களுடன் சந்திப்பு ஒன்றை ஏற்படுத்தியபோது கடந்த பேரவைக் கூட்டத்தில் பதிவாளரை மீண்டும் நியமிப்பது தொடர்பாக எடுக்கப்பட்ட முடிவை எதிர்வரும் 26ஆம் திகதி நடைபெறவிருக்கும் பேரவைக் கூட்டத்தில் உறுதிப்படுத்தியதன் பின்னர் முடிவை அமுல்படுத்துவதாக துணைவேந்தர் எழுத்துமூலமாக உறுதி மொழி வழங்கினார்.

இதனையடுத்து இவர்களது போராட்டம் தற்காலிகமாக இடை நிறுத்தப்பட்டுள்ளது. (க-19)

# ஹெயிட்டியில் உயிரிழந்த இராணுவ வீரரின் சடலம் இலங்கைக்கு கொண்டுவரப்படும்

(கொழும்பு)

ஹெயிட்டியில் உயிரிழந்த இலங்கை மற்றும் நேபாள அமைதிகாக்கும் படையினருக்காக ஐ.நா செயலாளர் கொபி அனான் தனது அனுதாபத்தை வெளியிட்டுள்ளார்.

இவ்வாறான நிலையில் ஹெயிட்டியின் பாதுகாப்பை மேலும் உறுதி செய்வதற்காக ஐ.நா படையினர் தொடர்ந்தும் செயற்படுவார்கள் என்றும் கொபி அனானின் ஊடகப் பேச்சாளர் தெரிவித்தார். இதேவேளை அங்கு அமைதிகாக்கும் பணியில் ஈடுபட்டிருந்தவேளை உயிரிழந்த இராணுவ வீரரின் சடலம் இலங்கைக்கு கொண்டுவரப்படுமென இராணுவப் பேச்சாளர் தயாரட்நாயக்க தெரிவித்துள்ளார்.

ஹெயிட்டியில் தீவிரவாதிகளுடன் கடந்த வியாழக்கிழமை நடைபெற்ற மோதலின் போதே அவர் உயிரிழந்தார். காலாட்படையில் இணைந்து சிறப்பாகக் கடமையாற்றியமையால், இவர் ஐ.நாவின் அமைதிகாக்கும் படையில் சேர்த்துக் கொள்ளப்பட்டார்.அண்மையிலேயே இலங்கைப் படையினர் ஹெயிட்டிக்கு சென்றமை குறிப்பிடத்தக்கது. (க-8,7)

# தனியார்துறை ஊழியர்களுக்கு 70 வீத வேதன உயர்வு வழங்குக!

## ஐ.தே.க., அரசிடம் கோரிக்கை

(கொழும்பு)

தனியார்துறை ஊழியர்களுக்கு 70 வீத வேதன உயர்வு வழங்கப்படவேண்டுமென ஐக்கிய தேசியக்கட்சி அரசாங்கத்திடம் கோரிக்கை விடுத்துள்ளது.

அக்கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் பந்துல குணவர்த்தன நேற்று முன்தினம் கொழும்பில் நடைபெற்ற ஊடகவியலாளர் மாநாட்டிலேயே இதனைத் தெரிவித்தார். இதேவேளை வடக்கு-கிழக்கு மாகாணசபை தவிர்ந்த ஏனைய மாகாணசபை நிர்வாகங்களின் வருமானத்தின் மீதான வரி ஒரு வீதத்திலிருந்து ஐந்து சதவீதமாக உயர்த்தப்பட்டிருக்கின்றது.

அடுத்த மாதம் முதலாம் திகதி முதல் நடைமுறைப்படுத்தப் படவுள்ள இந்தவரி உயர்வின் விளைவாக ஆழிப்பேரலையினால் பாதிக்கப்பட்ட வர்த்தகர்களும் பாரியநிதி நெருக்கடிகளுக்கு உள்ளாவர் என்று அவர் தெரிவித்தார்.

இதேவேளை, இந்த மாநாட்டில் கருத்துத் தெரிவித்த பாராளுமன்ற உறுப்பினர் ஹெகலிய ரம்புக் வெல்ல, நாட்டில் தற்போதைக்கு சர்வஜன வாக்கெடுப்புக்கு அவசியமில்லை.

ஆனால் உரிய திகதியில் ஜனாதிபதித் தேர்தல் நடாத்தப்பட வேண்டும். அதேநேரம் ஜனாதிபதி முறையை இரத்துச் செய்யுமாறு ஐக்கிய தேசியக் கட்சி கோரவில்லை. எனினும் அந்தப் பதவி பாராளுமன்றத்துக்கு பொறுப்புக்கூறுவதாகவே அமையவேண்டும் என்பதே தமது கட்சிக் கொள்கை எனவும் தெரிவித்தார். (க-7-4)

# அரசுக்கு எதிராக நம்பிக்கையில்லா பிரேரணை; ஏப்பிரலில் ஐ.தே.கவினால் கொண்டுவரப்படும்

## ஹெகலிய ரம்புக்வெல எம்.பி

(கொழும்பு)

ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி அரசாங்கத்துக்கு எதிராக நம்பிக்கையில்லாப் பிரேரணையினை கொண்டு வரவும், போராட்டங்களை நடத்தவும் ஐக்கிய தேசியக கட்சி திட்டமிட்டுள்ளது.

சித்திரை புதுவருடத்தினையடுத்து அரசாங்கத்துக்கு எதிரான நடவடிக்கை முன்னெடுக்கப்படும் என்று ஐக்கிய தேசியக கடசியின் பாராளுமன்ற உறுப்பினரும் முன்னாள் அமைச்சருமான ஹெகலிய ரம்புக்வெல தெரிவித்தார்.

கடந்த தேர்தலில் மக்கள் ஆணையினைப் பெற்ற அரசாங்கத்துக்கு ஒருவருடகால அவகாசம் வழங்கியுள்ளோம்.

ஒருவருடத்துக்குள் அரசாங்கம் எதனையும் செய்யவில்லை. இதனால் ஏப்ரல் புதுவருடத்துக்கு பின்னர் அரசாங்கத்துக்கு எதிரான போராட்டங்களை முன்னெடுப்போம் என்றும் அவர் கூறினார்.

எதிர்க்கட்சி தலைவர் அலுவலகத்தில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற செய்தியாளர் மாநாட்டில் கருத்து தெரிவிக்கும் போதே இவ்வாறு அவர் கூறினார்.

இங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது,

மக்கள் ஆணை பெற்ற அரசாங்கத்துக்கு ஒரு வருடம் கால அவகாசம் வழங்க வேண்டும் என்பதே எமது . தலைவர் ரணில் விக்கிரமசிங்கவின் நிலைப்பாடாக இருந்தது.

இதனால்தான் அரசாங்கத்துக்கு இதுவரை சந்தர்ப்பத்தினை வழங்கி வந்தோம். ஏப்ரல் மாதத்துடன் அரசாங்கம் பதவியேற்று ஒரு வருடம் பூர்த்தியாகின்றது. மக்களுக்கு அரசாங்கம் எதுவித நன்மைகளையும் செய்யவில்லை. எனவே இனியும் பொறுமை காக்க முடியாது.

பொறுப்பு வாய்ந்த எதிர்க்கட்சி என்ற வகையில் நாம் நடவடிக்கைகளை மேற்கொள்வோம். சுனாமி அனர்த்தத்தையடுத்து நாட்டை மீளக் கட்டியெழுப்புவதற்கு அரசாங்கத்திற்கு ஒத்துழைப்பு வழங்குவதற்கு நாம் முடிவு எடுத்தோம். ஒத்துழைப்பும் வழங்கினோம். ஆனால் அரசாங்கம் அதனை பயன்படுத்திக் கொள்ளவில்லை.

சுனாமி நிவாரண நிதிக்கு 5 சதம் கிடைக்கவில்லை என்று ஜனாதிபதி சந்திரிகா கூறுகின்றார். திறைசேரியின் செயலாளரோ 700 மில்லியன ரூபா கிடைத்ததாக கூறுகின்றார. அமைச்சர் மங்கள சமரவீரவோ ஜப்பான் நிதி உதவி கிடைத்ததாக கூறுகின்றார். இப்படியான நிலையில் நாட்டை எப்படி மீளக்கட்டியெழுப்ப முடியும்?

ஆனாலும் மக்களுக்காக இன்றும் சுனாமி நிவாரண நடவடிககைகளுக்கு நாம் ஒத்துழைப்பு வழங்கி வருகின்றோம். ஆனால், தொடர்ந்தும் மக்களுக்கு கஷ்டங்களை அரசாங்கம் ஏற்படுத்துமானால் அதனை பார்த்துக் கொண்டிருக்க முடியாது.

அரசாங்கம் சர்வஜன வாக்கெடுப்பினை நடத்த திட்டமிட்டுள்ளது.

நிறைவேற்று ஜனாதிபதி முறையில் உள்ள சில சரத்துக்கள நீக்கப்படத்தான் வேண்டும்.

ஜனாதிபதி, நீதி மன்றம், பாராளுமன்றம் என்பவற்றுக்கு பதிலளிக்கத்தக்க வகையில் மாற்றம் செய்யப்படவேண்டும். இதனை பாராளுமன்றத்தில் கலந்துரையாடி மேற்கொள்ள முடியும். இதற்கு சர்வஜன வாக்கெடுப்பு தேவையற்றதாகும்.

இதேவேளை, ஜனாதிபதி தனது தனிப்பட்ட அரசியல் நலனுக்காகவே சர்வஜன வாக்கெடுபபினை நடத்த முயல்கின்றார் என்றும் அவர் குற்றஞ்சாட்டினார். (க)

## மன்னார் இளம் பெண் பாலியல் வல்லுறவு அடையாள அணிவகுப்பு மீண்டும் இரத்து

(மன்னார்)

தாயகம் திரும்பிய இலங்கைத் தமிழ் அகதிகளின் உடமைகள் ஆயுத முனையில் கொள்ளையடிக்கப்பட்டதுடன், இளம் பெண் ஒருவரை பாலியல் வல்லுறவுக்கு உட்படுத்தியதாகத் தெரிவிக்கப்பட்ட வழக்குத் தொடர்பான அடையாள அணிவகுப்பை மன்னார் மாவட்ட நீதி மன்றம் நேற்றுமுன்தினமும் இரத்துச்செய்துள்ளது.

எனினும் கொள்ளை தொடர்பான விசாரணைகளை மேற்கொண்டு அறிக்கை சமர்ப்பிக்குமாறு பொலிஸாருக்கு உத்தரவிடப்பட்டிருக்கின்றது. இந்த வழங்கில் சம்பந்தப்பட்ட 9 சாட்சிகளில் ஒரு பெண் உட்பட 4 பேர் மட்டுமே நீதிமன்றத்திற்கு நேற்றுமுன்தினம் வருகைதந்திருந்தார்கள்.

சந்தேக நபர்களை அடையாளம் காண முடியாது எனத் தெரிவித்ததையடுத்து அடையாள அணிவகுப்பு இரத்துச் செய்யப்பட்டதாகப் பொலிஸார் தெரிவித்தனர்.

பாலியல் வல்லுறவுக்கு உட்பட்டதாகத் தெரிவித்து வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ள இளம்பெண் நீதிமன்றத்துக்கு வருகைதரவில்லை என்றும் அவர் தொடர்பான வைத்திய அறிக்கையில் அவர்மீது பாலியல் வல்லுறவு மேற்கொண்டதற்கான தடயங்கள் எதுவும் இல்லை என்றும் தெரிவிக்கப்பட்டிருப்பதாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.

இந்த வழக்குத் தொடர்பான பொலிஸாரின் விசாரணைகளில் தலைமன்னார் ஊர்முனை கடற்படையினர் மீது சந்தேகம் தெரிவிக்கப்பட்டிருந்தது. இதனையடுத்து மன்னார் மாவட்ட நீதி மன்றம், கடற்படை முகாமைச் சேர்ந்த 22 கடற்படையினரை அடையாள அணிவகுப்புக்கு உட்படுததுமாறு பொலிஸாருக்கு உத்தரவிட்டிருந்தது.

இந்த அணிவகுப்பு கடந்த 15 ஆம் திகதி நடைபெறவிருந்த போதும் முறைப்பாட்டாளரான பெண் சமூகமளிக்கவில்லை எனினும் அவரும் மேலும் மூவரும் நீதிமன்றில் ஆஜராகினர்.

எனினும் அப்பெண்ணால் பாலியல் வல்லுறவில் ஈடுபட்டதாகக் கூறப்படும் பிரதிவாதிகளை அடையாளம் காட்ட முடியவில்லை இதனையடுத்து பொலிஸாரை எதிர்வரும் மே மாதம் 5 ஆம் திகதி மேலதிக அறிக்கையை சமர்ப்பிக்குமாறு நீதிவான் உத்தரவிட்டார். (7,4)

## இராசி பலன்

24.03.2005
பங்குனி 11, வியாழக்கிழமை
சதுர்த்தி பின்னிரவு 2.40 மணிவரை
பூரம் முன்னிரவு 11.14 மணிவரை
இராகுகாலம் 01.45 - 03.15 மணிவரை
சுபநேரம் 7.45 - 9.15 மணிவரை

| | |
|---|---|
| மேடம் | வியாபார நன்மை, குடும்பக்கவலை, உடல் நலக்குறைவு, முயற்சி தாமதம். |
| இடபம் | பயந்த சுபாவம், தாய்வழி உறவு, முயற்சி தாமதம், கல்வியில் ஆர்வம். |
| மிதுனம் | கூட்டு முயற்சி, தெய்வசிந்தை, போசன சுகம், கீர்த்தி. |
| கடகம் | பண விரயம், காரிய தாமதம், உணர்ச்சி வசப்படுதல், வேலைச்சுமை. |
| சிங்கம் | பெரியோர் ஆதரவு, தேகநலன், எடுத்த காரியம் கைகூடும், பண வருவாய். |
| கன்னி | பிரயாணம், சயனசுகக்குறைவு, சுபசெலவு, முயற்சி தாமதம். |
| துலாம் | தொழில் வருமானம், உறவினர் வருகை, காரிய சித்தி, போசன நன்மை. |
| விருச்சிகம் | அதிகாரம், தூரதேசச்செய்தி, அதிக பிரயாசை, இஷ்டசித்தி. |
| தனுசு | புதிய திட்டமிடல், பிதாசிந்தை, ரோகநிலை, அச்சமான நிலை. |
| மகரம் | காரியதாமதம், உறவினர் வெறுப்பு, எதிர்பாராத நன்மை, தொழில் நன்மை. |
| கும்பம் | களஸ்திர நன்மை, பிரயாணம், காரிய சித்தி, பொருள் சேர்க்கை. |
| மீனம் | மனமகிழ்ச்சி, சுபகாரியம், உடல் நலம், சத்துரு ஜெயம். |

பழைய நேரப்படிகணிப்பிடப்பட்டது

-வளவன்

### போராட்டத்தில் ஈடுபட்ட

## தபால் ஊழியர்கள் மீது ஒழுக்காற்று நடவடிக்கை

(கொழும்பு)

சுகவீன விடுமுறை அடிப்படையில் தொழிற் சங்க நடவடிக்கைகளில் ஈடுபட்ட தபால் ஊழியர்கள் மீது ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்குமாறு தபால் மா அதிபர் ஆலோசனை தெரிவித்துள்ளார்.

பிரதித் தபால் அதிபர்கள், பிரதேச தபால் அதிகாரிகள் உட்பட உயர் அதிகாரிகள் அனைவருக்கும் சுற்றறிக்கை மூலம் அவர் இதனை அறிவித்துள்ளார்.

சுகவீன விடுமுறையில் சென்றதாகக் கூறப்படுபவர்கள் அதற்குரிய வைத்திய சான்றிதழ்களை சமர்ப்பிக்க வேண்டுமென்று தபால் மா அதிபர் கூறியுள்ளார்.

இதேவேளை, தபால் ஊழியர்களின் தொழில் உரிமையகளை மீறும் வகையில் தபால் மா அதிபரால் விடுக்கப்பட்டுள்ள சுற்றறிக்கையை ரத்துச் செய்யக்கோரி அகில இலங்கை தொழிற் சங்கங்களின் சம்மேளனம் அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (க-7)

## ஜனாதிபதி என்றுமே உண்மைதான் பேசுவார்

### பந்துல குணவர்த்தன எம்.பி.கிண்டல்

(கொழும்பு)

ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க என்றுமே உண்மை தான் பேசுவார்.

இதனால்தான் நிவாரணத்துக்கு 5 சதம் கூட கிடைக்கவில்லை என்று அவர் தெரிவித்துள்ளார் என பந்துல குணவர்த்தன எம்.பி.நகைச்சுவையாக தெரிவித்தார்.

எதிர்க்கட்சித் தலைவர் அலுவலகத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற செய்தியாளர் மாநாட்டின் போதே அவர் இவ்வாறு கூறினார்.

இது குறித்து மேலும் கருத்துத் தெரிவித்த அவர், ஜனாதிபதி சந்திரிகா என்றும் உண்மையைத்தான் பேசுவார் சுனாமி அனர்த்த நிவாரணத்துக்காக வெளிநாடுகளில் இருந்து டொலராகவும் ஸ்ரேலிங் பவுணாகவும் பெருமளவு நிதி கிடைத்திருந்தது.

ரூபாவாகவோ சதமாகவோ நிதி கிடைக்கவில்லை. இதனால்தான் 5 சதம் கூட தமக்குக் கிடைக்கவில்லை என்று ஜனாதிபதி கூறியிருக்கிறார் என்றார். (க)

## சுனாமி அனர்த்தம் குறித்த கருத்தரங்கும் நூல் வெளியீடும்

(யாழ்ப்பாணம்)





யாழ்ப்பாண மாநகர நூலக சபை நடாத்திய சுனாமி அனர்த்தக் கருத்தரங்கும் செங்கை ஆழியான் கலாநிதி கந்தையா குணராசா எழுதிய சுனாமி அறிவியல சார் விபரண நூல் வெளியீடும் நேற்றுமுன்தினம் யாழ்ப்பாண பொது நூல் நிலையக் கருத்தரங்கு மண்டபத்தில் நடைபெற்றது.

இந் நிகழ்வில் சுனாமி அனர்த்தம் தொடர்பாக யாழ்.பல்கலைக் கழக புவியியற்றுறை சிரேஷ்ட விரிவுரையாளர் கலாநிதி எஸ்.ரி.பி.இராஜேஸ்வரனும் சுனாமி அரசியல் தொடர்பாக யாழ். பல்கலைக்கழக அரசியல்துறை விரிவுரையாளர் கே.ரி.கணேசலிங்கமும், சுனாமி நிவாரணம் தொடர்பாக யாழ்.பல்கலைக் கழக பொருளியல் துறைத் தலைவர் பேராசிரியர் பசுபதி சிவநாதனும, சுனாமியும் நானும் என்ற தலைப்பில கிழக்கு பல்கலைக கழக நுண் கலைத்துறைப்பீடாதிபதி பேராசிரியர் எஸ்.மௌனகுருவும் உரையாற்றினார்கள்.

சுனாமி அறிவியல்சார் விபரண நூல் பற்றி கலாநிதி மனோன்மணி சண்முகதாஸ் ஆய்வுரை நிகழ்த்தினார்.

(க-19)

ஆய்ந்தாய்ந்து கொள்ளாதான் கேண்மை கடைமுறை
தான்சாந் துயரம் தரும் - குறள்

வலம்புரி

## இனப்பிரச்சினைக்கு தீர்வுகாண பிரதான கட்சிகள் இணைய வேண்டும்

இலங்கை என்ற இந்த அழகிய நாட்டை மீளக் கட்டியெழுப்ப வேண்டுமாயின் சிறிலங்கா சுதந்திரக்கட்சியும் ஐக்கிய தேசியக்கட்சியும் ஒன்றிணைவது மிகவும் அவசியமானதாகும்.

கடல்கோள் அனர்த்தம் ஏற்படுத்திய பேரழிவு அதற்கு முன்னர் யுத்தம்தந்த அழிவு இவற்றின்காரணமாக உலக நாடுகளின் உதவி இலங்கைக்கு தாராளமாக கிடைத்துள்ளது.

இந்தநிதி உதவியை தகுந்த முறையில் இன மத, மொழிவேறுபாடுன்றி அரசு பயன்படுத்துமாயின் எதிர்கால இலங்கை சுபீட்சம் நிறைந்த நாடாக மிளிர்வது உறுதி. கடல்கோள் அனர்த்தம் துயரம் தந்த வெற்றியாக அமையவேண்டுமானால் ஆட்சியாளர்கள் எதிர்க்கட்சி பெரும்பான்மையின மக்கள், பௌத்த பீடங்கள் என்ற நான்குதரப்பிலும் நியாயபூர்வமான -நிரந்தரமான மனமாற்றம் ஏற்படல்வேண்டும்.

அதிலும் இனவாதம், மொழிவாதம் என்றபேதங்கள் ஆணிவேரோடு பிடுங்கப்படுமானால் மட்டுமே இலங்கையின் எதிர்காலம் சிறப்பாக அமையும். சுனாமி என்ற இயற்கை அனர்த்தம் ஏற்படுத்திய அழிவு தவிர்க்க முடியாததொன்று. அது இறைவனின் செயல் என்பதுடன் மனதை தேற்றுவதை விட வேறுவழி இல்லை.

ஆனால், இலங்கையில் நடந்த இன யுத்தத்தால் அழிந்த மக்களின் எண்ணிக்கை இலட்சத்தைதாண்டி விட்டது.

எறிகணை தாக்குதல், யுத்தவிமானத்தாக்குதல், குண்டுத்தாக்குதல் என்றவாறு செயற்கை அனர்த்தம் ஏற்படுத்திய மனிதப்பேரழிவு பற்றிச் சிந்தித்தால் இதனை இறைவனின் செயல் என்று கூறுவது மடமைத்தனமானதாகும்.

இது மனிதனை மனிதன் வதைக்கும் ஓர் வக்கிர உணர்வால் ஏற்பட்ட யுத்தஅழிவாகும் சிந்திக்கக்கூடிய மனிதன் இந்தநாட்டில் தானே உயர்ந்தவன் எனக் கருத்திக்கொள்கிறான்.

இந்தநாட்டை ஆள்வதற்காகப் படைக்கப்பட்டவன் நானும் எனது இனமும் எனது மதமும் என்ற குறுகிய கொள்கையால் அடக்கு முறை, சித்திரவதை, படுகொலை என்ற கோரச்செயல்கள் தாண்டவமாடுகின்றது.

இதனை அனுபவித்த் அடக்கப்பட்ட மக்கள் வீறாப்புக் கொண்டெழுந்து அடிப்படை உரிமைக்காக போராடுகின்ற போதே யுத்தம் வெடிக்கின்றது. யுத்தத்தைக் குறைகூறும் எவரும் அந்த யுத்தத்திற்கான காரணம் பற்றி எதுவுமே சிந்திப்பதில்லை.

ஒரு நாட்டைச் சேர்ந்த எல்லாப்பிரஜைகளும் சரிசமனாக மதிக்கப்பட்டால் எல்லோருக்கும் சம உரிமை என்பது நிலை நாட்டப்பட்டால் போராட்டம் - யுத்தம் என்றபேச்சுக்கே இடம் இருக்கமாட்டாது.

அபிவிருத்தி அடைந்த நாடுகளை - மனித உரிமைகளை வெகுவாகப் பாதுகாக்கின்ற தேசங்களை எடுத்து நோக்கினால் அங்கும் பல்லின மக்கள் வாழ்கின்றனர். ஆனால் அங்கு 'மனிதம்' என்பது மட்டுமே நோக்கப்படுகின்றது. மதம், இனம், மொழி என்ற பேச்சுக்கே இடம் இல்லாத தனால் அந்தநாடுகள் உயர்ந்த அபிவிருத்தியை மானிடப்பண்பை கொண்டுள்ளன.

எனவே கடந்த காலங்களில் தமிழ் மக்களின் உரிமைகளை நசுக்குவதில் முனைப்புடன் செயற்பட்ட சிறிலங்கா சுதந்திரக்கட்சி, ஐக்கியதேசியக் கட்சி போன்ற நாட்டின் பிரதான அரசியல் கட்சிகள் இனவாதத்தை மறந்து எல்லோரும் இந்த நாட்டின் மக்கள் என்ற உணர்வோடு ஒன்றிணைந்து செயலாற்ற வேண்டும். இனப்பிரச்சினைக்கு விரைவான தீர்வை காணவேண்டும். இது காலத்தின் அவசர தேவையாகும்.

## சுனாமி அனர்த்த அபிவிருத்திப் பணிகள் சகல தரப்பு திட்டமிடற் குழுவிடம்

(கொழும்பு)

ஆழிப்பேரலையினால் அழிவடைந்த சகல பிரதேசங்களில் அபிவிருத்திப் பணிகளை, சகல தரப்பினரும் உள்ளடக்கப்பட்ட திட்டமிடல் குழுமூலம் மேற்கொள்ள தீர்மானிக்கப்பட்டுள்ளதாக நகர அபிவிருத்தி அமைச்சர் தினேஷ் குணவர்த்தன தெரிவித்துள்ளார்.

கொழும்பில் அண்மையில் நடைபெற்ற ஊடகவியலாளர் மாநாட்டிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இது தொடர்பாக மேலும் தெரிவிக்கையில், பாதிக்கப்பட்ட பகுதிகளில் அபிவிருத்தி நடவடிக்கையை முறையான திட்டத்தின் அடிப்படையில் மேற்கொள்வதே இதன் நோக்கமாகும்.

இந்த அபிவிருத்தி திட்டத்தில் உள்ளூராட்சி மன்றங்கள், நகர அபிவிருத்தி அதிகார சபை, கடற்கரையோர பாதுகாப்பு அதிகாரி, முதலமைச்சரின் பிரதிநிதி மற்றும் சமூகத்தை பிரதிநிதித்துவப்படுத்தும் ஒருவர் அடங்கிய பொதுக் குழுமூலம் நிபந்தனை அடிப்படையில் அப்பிரதேசங்களின் அபிவிருத்திகளை மேற்கொள்ள தீர்மானித்திருக்கிறோம்.

அதேவேளை கரையோரத்திலிருந்து 100 மீற்றர் எல்லையிலோ, அதற்கு உள்ளேயோ கட்டடங்களை அகற்றும் அதிகாரம் நகர அபிவிருத்தி அமைச்சுக்கே உரியது.

கடற்கரையிலிருந்து 100 மீற்றர் எல்லை நிர்மாண நடவடிக்கைகள் மற்றும் சட்டவிரோத கட்டடங்களை அகற்றும் நடவடிக்கைகளுக்கான முழுமையான அதிகாரம் நகர சபை அபிவிருத்தி அதிகாரசபையின் திட்டமிடல் அதிகாரிகளினால் செயற்படுத்தப்படும்.

(க-7-8)

## முரளிதரன் மதிமலர் தம்பதிக்கு பாராளுமன்றத்தினர் வாழ்த்து

(கொழும்பு)

திருமண பந்தத்தில் இணைந்து கொண்டுள்ள இலங்கை கிரிக்கெட் அணியின் நட்சத்திர சுழல்பந்து வீச்சாளர் முத்தையா முரளிதரன் மதிமலர் தம்பதியினரின் எதிர்கால வாழ்வு வளம்பெற வேண்டுமென பாராளுமன்ற உறுப்பினர்கள் வாழ்த்து தெரிவிப்பதாக சபாநாயகர் டபிள்யூ. ஜே.எம். லொக்குபண்டார தெரிவித்திருக்கிறார்.

ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு பாராளுமன்ற உறுப்பினர் விமல் வீரவன்ஸ உரையாற்றுவதற்கு தயாரான போதே சபாநாயகர் இவ்வாறு தெரிவித்தார்.

திருமண பந்தத்தில் இணைந்து கொண்ட முரளிதரன் தம்பதியினருககு பாராளுமன்றத்தின் வாழ்த்துக்களும் தெரிவிக்கப்பட வேண்டுமென பாராளுமன்ற உறுப்பினர் விமல் வீரவன்ஸ தெரிவிக்க இருந்தசமயமே சபாநாயகர் வாழ்த்துத் தெரிவித்தார்.

பாராளுமன்ற நிகழ்ச்சி நிரலுக்கு அமைய இவ்வாறான உரையொன்றை ஆற்றுவதற்கு வாய்ப்பளிக்க முடியாதென சபாநாயகர் தெரிவித்தார்.

கேள்வி நேரத்தில் கேள்வியல்லாத விடயம் குறித்து உரையாற்றுவது பாராளுமன்றத்தின் நிலையியல் கட்டளைகளுக்கு அமையாதது. எவ்வாறாயினும் முரளிதரன் தம்பதிக்கு வாழ்த்து தெரிவிப்பதற்கு பாராளுமன்ற உறுப்பினர்கள் அனைவரும் ஒன்றிணைந்திருப்பதால் அது நடைமுறைபபடுத்தப்பட்டதாகவும் சபாநாயகர் மேலும் தெரிவித்தார். (7-8)

## பில். கிளின்ரன் மீண்டும் இலங்கை வருவார்?

சுனாமி அனர்த்தத்திற்கு பின்னர் மேற்கொள்ளப்படும் புனர்நிர்மாண நடவடிக்கைகள் பற்றி ஆராயவென ஐக்கிய நாடுகள் ஸ்தாபனத்தின் விசேட பிரதிநிதி ஏஸ்கின் வோல்ஸ் நேற்று முன்தினம் இலங்கை வந்து சேர்ந்துள்ளார்.

முன்னாள் அமெரிக்கா ஜனாதிபதியும் ஐக்கிய நாடுகள் விசேட பிரதிநிதியுமான பில்கிளின்ரனின் பிரதி அதிகாரியாக இவர் நியமிக்கப்பட்டுள்ளார்.

இங்கு வந்துள்ள வோல்ஸ் நேற்று முன்தினம் தென்மாகாணத்திற்கு விஜயம் ஒன்றை மேற்கொண்டு அரசாங்க அதிகாரிகளுடனும, நிவாரண நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளோருடனும் கலந்துரையாடியுள்ளார்.

மேலும் ஐக்கிய நாடுகள் விசேட பிரதிநிதியில் கிளின்ரனும் இலங்கைக்கு மற்றுமொரு விஜயத்தை மேற்கொள்வார் எனவும் எதிர்பார்க்கப்படுகிறது.

நிவாரண நடவடிக்கைகளை அவதானிக்கவும், அரசாங்க மற்றும் அரசசார்பற்ற நிறுவனங்களின் அதிகாரிகளுடன் பேச்சுக்களை நடத்துவதே அவரது விஜயத்தின் நோக்கமாகும்.

(க-19)

## யாழ்.விஞ்ஞான சங்கம் நடாத்தும் மாபெரும் கண்காட்சிப் போட்டி

யாழ். விஞ்ஞான சங்கம், கொமர்ஷல் வங்கியின் அனுசரணையுடன் யாழ். மாவட்ட பாடசாலை மாணவர்களிடையே நடாத்தும் மூன்று நாள் மாபெரும் கண்காட்சிப் போட்டி நேற்று கொக்குவில் இந்துக் கல்லூரியில் ஆரம்பமாகியது.



இந் நிகழ்விற்கு பிரதம விருந்தினராக கொக்குவில் இந்துக் கல்லூரி அதிபர் பொ.கமலநாதனும், சிறப்பு விருந்தினர்களாக கொமர்ஷியல் வங்கியின் யாழ். பிராந்திய முகாமையாளர் எஸ். ரவீந்திராவும், சர்வதேச தமிழீழ மாணவர் பேரவையின் பொறுப்பாளர் கண்ணனும் கலந்துகொண்டனர்.

3 நாட்கள் தொடர்ந்து நடைபெறும் இக் கண்காட்சியை பிரதம விருந்தினராக கலந்துகொண்ட கொக்குவில் இந்துக் கல்லூரி அதிபர் பொ. கமலநாதன் வைபவரீதியாக ஆரம்பித்துவைத்தார். அத்துடன் இந் நிகழ்வில் யாழ் விஞ்ஞான சங்கத் தலைவர் சு. இராஜதுரை, முன்னாள் தலைவர் பேராசிரியர் குமாரவடிவேல் ஆகியோரும் கலந்துகொண்டார்கள்.

இக் கண்காட்சியில் யாழ். மாவட்டத்தைச் சேர்ந்த 15 பாடசாலைகள் பங்குபற்றியுள்ளன. அவற்றை விட யாழ். பல்கலைக்கழக விவசாய பீடத்தினர், தொல்பொருள் ஆராய்ச்சிச் துறையினர், புவியியற் துறையினர் மற்றும் விஞ்ஞான பிடத்தினரும் தங்கள் துறை சார்ந்தவற்றையும் இக் கண்காட்சியில் காட்சிக்கு வைத்துள்ளமை குறிப்பிடத் தக்கது.

(க-19)

## சுனாமியால் பாதிப்புற்ற ஊர்காவற்றுறை பிரதேச மக்களுக்கும் அரச நிவாரணம்

ஊர்காவற்றுறைப் பிரதேச கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசம் சுனாமியினால் பாதிக்கப்பட்ட அங்கத்தவர்களுக்கு அரசின் உதவிகளினைப் பெற்றுக் கொடுக்க நடவடிக்கையினை எடுத்துள்ளது.

அந்த வகையில் இப்பிரதேசத்தில் பாதிக்கப்பட்ட 819 குடும்பங்களுக்கு சுனாமி உலர் உணவு முத்திரை பெற்றுக கொடுக்கப்பட்டுள்ளது.

அத்துடன், 122 குடும்பங்களுக்கு சுனாமி உதவிக் கொடுப்பனவான 5 ஆயிரம் ரூபா வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக ஊர்காவற்றுறைப் பிரதேச கடற்றொழிலாளர் கூட்டுறவுச்சங்கங்களின் சமாசத்தின் தலைவர் பொ.கனகையா தெரிவித்தார்.

இவ் உதவிகள் அனலைதீவு, எழுவைதீவு, ஊர்காவற்றுறை, மெலிஞ்சிமுனை, பருத்தியடைப்பு, தம்பாட்டி ஆகிய இடங்களைச் சேர்ந்தவர்களுக்கும் வழங்கப்பட்டுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

(க-75)


## நூலறிமுகமாலை

தமிழில் சமூகம், பண்பாடு தொடர்பான காத்திரமான உரையாடலை உருவாக்கும் நோக்கத்தை அடிப்படையாகக் கொண்ட 'பனுவல்' என்ற ஆய்வேட்டினதும் காண்பியக் கலை மற்றும் பேறு தொடர்பான அறிவுசார் விடயங்களை உள்ளடக்கிய 'Artlab' என்ற இதழினதும் அறிமுக நிகழ்ச்சி நாளை வெள்ளிக்கிழமை மாலை 4 மணிக்கு நாவலர் கலாசார மண்டபத்தில் நடைபெற உள்ளது.

கலாநிதி சுபோதினி ரமேஷ் தலைமையில் இடம்பெறும் மேற்படி நிகழ்ச்சியில் பனுவல் முதலாவது இதழ் தொடர்பான எதிர்வினையை கலாநிதி பி. இரகுபதியும், இரண்டாவது இதழ் தொடர்பான எதிர்வினையை கலாநிதி எம். சண்முகலிங்கனும், 'Artlab' தொடர்பான எதிர்வினையை இலக்கியவாதியும் இலக்கியச் செயற்பாட்டாளருமான திரு. அ.யேசுராசாவும் நிகழ்த்துவார்கள்.

(க)

### சாயி அருள் அமுதம்



ஆசை, துவேஷசம் என்ற தீய இயல்புகளை அகற்றி கோபம், பேராசை என்னும் தீக் கொழுந்துகளை அணையுங்கள். அப்பொழுது மனிதனுடைய இயல்புகளான சாந்தம், சௌக்கியம், ஸ்வரூபம், சேவாபாவம் என்பவை தடையின்றி வெளிவரும். சாந்தமே மனிதனுடைய ஸ்வரூபமும் சௌக்கியமும் சுபாவமுமாகும்.

நன்றி
நாளாந்த நற்சிந்தனை

# அரசியல் நோக்கங்களுக்காக மாணவரை பயன்படுத்தவேண்டாம்

## கல்வி அமைச்சு பணிப்பு

(கொழும்பு)

பாடசாலை மாணவ, மாணவியரை அரசியல் நோக்கங்களுக்காக பயன்படுத்துவதை தடுக்கவேண்டும் என கல்வியமைச்சு, மாகாண அமைச்சுக்களுக்கு அறிவித்துள்ளது.

கடந்த சில நாட்களில் பல்வேறு நோக்கங்களை முன்வைத்து பிரதான பாடசாலையைச் சேர்ந்த மாணவ, மாணவியரை ஆர்ப்பாட்டத்தில் ஈடுபடுத்திய சம்பவங்கள் பற்றி அரசுக்கு அறிவிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

பாடசாலை வலைப்பின்னலில் திட்டமிட்ட கல்விமேம்பாட்டு செயற்திட்டங்கள் அமுல்செய்யப்படும் வேளையில் கல்வியை சீர்குலைத்து எதிர்காலத்தை இருளாக்க முனையும் அரசியல் சக்திகளிடம் சிக்கவேண்டாம் என கல்வியமைச்சு மாணவ சமூகத்திடம் கேட்டுள்ளது.

இது பற்றி பாடசாலை அதிபர்களுக்கு விளக்கம் அளிக்கப்பட்டுள்ளது. மாணவ, மாணவியரின் ஒழுக்கத்தை சீர்குலைக்கக் கூடிய எதிர்ப்பு இயக்கங்களில் பங்கேற்க அனுமதிவழங்கவேண்டாமென சுற்றறிக்கை மூலம் ஆலோசனை கூறப்பட்டுள்ளது.

பாடசாலை வலைப்பின்னலில் சீர்குலைவினை ஏற்படுத்த முனையும் அரசியல் சக்திகள் குறித்து அவதானமாக இருக்குமாறு ஜனாதிபதி அனைத்து மாகாண முதலமைச்சர்களுக்கு நேற்று அறிவித்துள்ளார்.

(ச-4)

# கொழும்பிலிருந்து மன்னார் சென்ற லொறி புத்தளத்தில் கொள்ளை

கொழும்பில் இருந்து மன்னார் நோக்கிச் சென்றுகொண்டிருந்த லொறிஒன்று புத்தளம் அநுராதபுர வீதி 21ம் மைல்கல் பகுதியில் வழிமறிக்கப்பட்டு அதிலிருந்த பொருட்கள் கொள்ளையிடப்பட்டுள்ளன.

மேற் குறிப்பிட்ட வீதியில் உள்ள ஏற்றத்தில் ஏறியபோது வழிமறித்து ஏறிய திருடர்கள் 5 லட்சம் ரூபா பெறுமதியான சிகரெட் பைக்கற்றுக்களையும், பெறுமதி வாய்ந்த உடுபுடைவைகளையும் கொள்ளையிட்டுள்ளனர்.

இச்சம்பவத்துடன் தொடர்புடையதாகக் கருதப்படும் இருவரை காலியவெலப் பகுதிப் பொலிஸார் கைதுசெய்துள்ளனர்.

அவர்களிடமிருந்த சிலபொருட்களையும் மீட்டுள்ளனர். இதேவேளை புத்தளம் 21ம் மற்றும் 13ஆம் மைல்கல் பகுதியில் வைத்து யாழ்ப்பாணம், மன்னார், வவுனியா பகுதிகளுக்கு செல்லும் பயணிகள் மற்றும் லொறிகள் மறிக்கப்பட்டு கொள்ளையிடப்பட்டுவருவதாக தெரிவிக்கப்படுகிறது.

இக்கொள்ளைச் சம்பவங்களில் பெரும்பான்மை இனத்தைச் சேர்ந்தவர்களே ஈடுபட்டுவருவதாக கூறப்படுகிறது. (ச-15)

# காமகோடி பீடத்தில் நாளை காயத்திரி யாகம்



(யாழ்ப்பாணம்)

யாழ்.திருநெல்வேலி காயத்திரி காமகோடி பீடத்தில் சித்தாமிருத பூரணை தினமான நாளை காலை 7.30 மணிக்கு கும்ப பூசையும் தொடர்ந்து காயத்திரி யாகமும் முற்பகல் 11 மணிக்கு விசேட அபிஷேகமும் இடம்பெறவுள்ளது.

பிற்பகல் 3 மணிதொடக்கம் இரவு 9 மணிவரை நவாவரண பூஜை நடைபெறவுள்ளது. இக் கிரியைகள் யாவற்றையும் இந்தியாவிலிருந்து வந்துள்ள நாமக்கல் மாவட்ட வேலூர் இராஜஇராஜேஸ்வரி ஆச்சிரம மாதாஜி ஸ்ரீவித்தியா அம்பாள் சரஸ்வதி மேற்கொள்ளவுள்ளார்.

இப்பூசை வழிபாடுகளில் பக்தர்களைக் கலந்துகொண்டு காயத்திரியின் அருளைப் பெற்றுச் செல்லும் வண்ணம் ஸ்ரீ காயத்திரி காமகோடி பீடத்தின் பீடாதிபதி சுவாமி ஸ்ரீ ராஜ்குமார் கேட்டுள்ளார். (ச)

### பொதுக்கட்டமைப்பில்...

சமாதானப் பேச்சுவார்த்தைக்கு அழைத்துள்ளது. தற்போது பொதுக்கட்டமைப்பில் விடுதலைப் புலிகளையும் இணைத்து அரசு உருவாக்குமானால் தம்மையும் அதில் இணைத்துக் கொள்ளவேண்டுமென ஜாதிக ஹெல உறுமய கேட்டுள்ளது.

அவ்விடயத்தில் அரசு தவறுமானால் அரசிற்கு எதிராக ஆர்ப்பாட்டங்களில் ஈடுபடுவதோடு அரசைக் கவிழ்க்கவும் நாங்கள் தயங்கமாட்டோம் என அத்துருகிரிய ரத்ன தேரர் தெரிவித்தார்.

சர்வதேச மட்டத்தில் எதிர்பார்க்கப்படும் பொதுக்கட்டமைப்பில் சர்வதேச நாடுகளின் பிரதிநிதிகளையும் அங்கத்தவர்களாக இணைக்கவேண்டும். அதனை வைத்துக் கொண்டு விடுதலைப் புலிகளை பொதுக் கட்டமைப்பில் சேர்க்கக்கூடாது என அவர் மேலும் தெரிவித்தார். (ச-04)

### பருத்தித்துறையில்...

விபத்துக்கள் ஆகிய இன்னோரன்ன அம்சங்களை முன்வைத்தும் மாபெரும் ஆர்ப்பாட்டப் பேரணியொன்று எதிர்வரும் திங்கட்கிழமை பருத்தித்துறையில் நடாத்தப்படவுள்ளது.

இப்பேரணிக்கான ஏற்பாடுகளை வடமராட்சி பொது அமைப்புக்களின் ஒன்றியம் மேற்கொண்டு வருகிறது. பருத்தித்துறை சிவன்கோவிலிருந்து ஆரம்பமாகும் பேரணி பருத்தித்துறை பிரதேச செயலகத்திலும், தம்பசிட்டியிலுள்ள போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழு அலுவலகத்திலும் மகஜர்களைக் கையளிக்கவுள்ளது. (ச-101-43)

### பொலிஸ்...

துப்பாக்கிச் சூட்டிற்கு இலக்காகியுள்ளார்.

இவர் தனது நண்பருடன் மோட்டார் சைக்கிளில் சென்று கொண்டிருந்த சமயம் குறிப்பிட்ட வீதிச் சோதனையில் பொலிசாரின் உத்தரவிற்கு அமைய சோதனைச் சாவடியைத் தாண்டி சென்று சைக்கிளை நிறுத்த முற்பட்ட சமயம் இந்த துப்பாக்கிப் பிரயோகம் செய்யப்பட்டதாகக் கூறப்படுகின்றது.

ஆனால் தமது உத்தரவை மீறி வேகமாகச் சென்றபோது, மோட்டார் சைக்கிளை நிறுத்துவதற்காக, அதன் ரயரை நோக்கி மேற்கொண்ட துப்பாக்கிப் பிரயோகத்தின்போதே, பின்னால் அமர்ந்திருந்தவர்களின் காலில் பட்டதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

(ச)

### இராணுவக்...

நூற்றுக்கணக்கான மக்கள் முல்லைத்தீவு கடற்கரை போன்ற கடற்கரை பிரதேசத்தில் வாழ்ந்து பேரலையால் அடித்துச் செல்லப்பட்டுள்ளனர் எனவும் தமிழ்ச்செல்வன் சுட்டிக்காட்டினார்.

போர்நிறுத்த உடன்படிக்கைகளின்படி இராணுவ கட்டுப்பாட்டுப் பகுதியில் ஆயுதங்களுடன் எவரும் நடமாடக்கூடாது. இருந்தும் விடுதலைப்புலிகளின் அரசியல் பிரிவைச் சேர்ந்தவர்கள் பலர் அரசியல்வேலை, ஆழிப்பேரலை மீட்பு நடவடிக்கையில் ஈடுபட்டிருந்தபோது இராணுவக்கட்டுப்பாட்டுப் பகுதியில் வைத்து கொல்லப்பட்டுள்ளனர் எனத் தெரிவித்தார். ஆழிப்பேரலை இரு பகுதியினருக்கும் சமாதான முன்னெடுப்பிற்கு ஒரு சிறந்த சந்தர்ப்பத்தை வழங்கியிருப்பதான கூற்றிற்கு தமிழ்ச்செல்வன் பதிலளிக்கையில், விடுதலைப்புலிகள் மனிதநேய உதவிகளுக்கும் மீள் நிர்மாணப் பணிக்கும் இணைந்து செயற்படுவதற்கான ஒரு செயற்திட்டத்திற்கு மணப்பூர்வமான செய்தி ஒன்றை அரசிற்கு அனுப்பியதாகவும் தமிழ்ச்செல்வன் தெரிவித்தார். (ச)

### அரசியல்துறையில் இருபொதிகள்

(யாழ்ப்பாணம்)

முகமாலையிலிருந்து நேற்று யாழ். நோக்கி வந்துகொண்டிருந்த வாகனமொன்றிலிருந்து வீதியில் விழுந்த இரண்டு பொதிகள் பொற்பதி வீதியில் அமைந்துள்ள யாழ்.மாவட்ட அரசியல்துறைப் பணிமனையில் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

உரிமையாளர் இனங்காட்டிப் பொருட்களைப் பெற்றுக்கொள்ளுமாறு அரசியல் துறையினர் கேட்டுள்ளனர். (ச)

### இலங்கையில்...

எஸ்கின் போலெஸ் கடந்தவாரம் நியமிக்கப்பட்டார். ஐ.நா. சபையின் பங்களிப்புடன் பாதிக்கப்பட்ட பகுதிகளில் மேற்கொள்ளப்படும் மீள்கட்டுமானப் பணிகளைப் பார்வையிடுவதற்க்கவே இவர் இப்பயணம் மேற்கொண்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. (ச)

### ஐ.தே.கவின் தீர்மானங்களை....

நேற்றுக்கண்டியில் மல்வத்த மகா நாயக்கரைச் சந்தித்தபின்னர் ஊடகங்களுக்கு கருத்துத் தெரிவித்தபோதே அவர் இதனைத் தெரிவித்தார்.

ஜே.வி.பி.யினை ஜனாதிபதி எதிர்த்து வருவதாக ஊடகங்கள் கருத்துவெளியிட்டு வருகின்றன. அது முற்றிலும் தவறானது. எமது கட்சிக்கும் சிறிலங்கா சுதந்திரக் கட்சிக்கும் இடையில் கருத்து வேறுபாடுகள் இருக்கலாம். அதனை வைத்துக் கொண்டு பொய்யான பிரசாரங்களை மேற்கொள்ளக்கூடாது. எப்படியாயினும் ஆட்சி நடத்தக்கூடிய அதிகாரத்தை ஜனாதிபதி எமக்கு அளித்துள்ளார்.

அது அவரின் பெருந்தன்மையாகும். அது வெளிப்படையான உண்மை. இப்படியான ஒரு நிலையில் அரசிலிருந்து எப்படி வெளியேறமுடியும் என்றார்.

ஜே.வி.பி. தொடர்பான உண்மை நிலைபாடுகளை தற்போது ஊடகங்கள் வெளியிடுவதில்லை. நாட்டில் அனைத்துக்கட்சிகளும் இணைந்து செயற்படவேண்டும் என ஜே.வி.பி.கோரிவருகிறது. எனினும் ஐ.தே. கட்சி முன்வைக்கும் அனைத்துத்திட்டங்களையும் எதிர்ப்பது என்ற நிலைப்பாட்டினைக் கொண்டுள்ளோம்.

6 மாதங்களுக்குள் ஆழிப்பேரலையினால் பாதிக்கப்பட்ட வீடுகளை மீள்கட்டுமானம் செய்வது கடினமான காரியமாகும். அது ஒருபோதும் இயலாதகாரியம் என அவர் மேலும் தெரிவித்தார்.

(ச-4)

### மார்க்க அறிஞர் நாடுகடத்தல்...

ஈடுபட்டிருந்தவேளை அங்கு பிரவேசித்த மற்றுமொரு இஸ்லாமியக் குழு ஒன்று வன்முறையில் ஈடுபட்டது.

இதன்காரணமாக ஏற்பாட்டாளர்கள் இருவர் காயமடைந்தனர். இச்சம்பவம் இடம்பெற்றுக்கொண்டிருந்த வேளையில் அங்கு வந்த பொலிஸார் இவரைக் கைது செய்து நாடு கடத்தினார்.

இவர் நாடு கடத்தப்பட்டமைக்கு எதிர்ப்புத் தெரிவித்து காத்தான்குடி லெப்பைப் பள்ளிவாசல் முன்றலிலிருந்து புறப்பட்ட நூற்றுக்கணக்கான முஸ்லிம்கள் பிரதான வீதிகள் ஊடாக பிரதேச செயலகத்தை சென்றடைந்தனர். இவ் ஆர்ப்பாட்டத்தில் மேல் மாகாண ஆளுநர் அலவி மௌலானா கொழும்பைச் சேர்ந்த மௌலவி நியாஸ், காத்தான்குடியைச் சேர்ந்த மௌலவி ஏ.எல். ஜஹியா ஆகியோரின் கொடும்பாவிகளும் எடுத்துச்செல்லப்பட்டு எரிக்கப்பட்டன.

இந்த மார்க்க அறிஞர் நாடுகடத்தப்பட்டமைக்கும், அதற்குப் பின்னணியிலிருந்து செயற்பட்டதாக கூறப்படும் மேற் குறிப்பிட்ட பிரமுகருக்கு எதிராகவும் வாசக அட்டைகளை ஏந்தியவாறு கோஷங்கள் எழுப்பப்பட்டன.

பிரதேச செயலக .முன்றலை சென்றடைந்த இந்த ஆர்ப்பாட்டக்காரர்கள் பிரதேச செயலாளர் ஏ.எல்.எம். பலீலிடம் ஜனாதிபதிக்கான மனுவொன்றை கையளித்தனர். (ச)

### இராணுவம் மக்களுக்கிடையே...

இதனையடுத்து இராணுவத்தினர் மேற்படி இளஞனை 30 மீட்டர் வரை வீதியில் போட்டு உருட்டி கடுமையாகத் தாக்கியுள்ளனர். இந்த இளைஞன் கடுமையான காயங்களுக்கு உள்ளாகியுள்ளார். அத்துடன் இளைஞனை தமது கல்மடு இராணுவ முகாமுக்கு கொண்டுசெல்வதற்கு முயற்சி செய்த வேளையில் மக்களுக்கும் இராணுவத்தினருக்குமிடையில் முறுகல்நிலை ஏற்பட்டது. பொலிசார் சம்பவ இடத்திற்கு வந்து விசாரணை மேற்கொள்ளவேண்டும், போர்நிறுத்த கண்காணிப்புக் குழுவினர் தளத்திற்கு வந்து விசாரணை மேற்கொள்ளவேண்டும், பாதிக்கப்பட்ட இளைஞனை இராணுவம் கொண்டுசெல்லக் கூடாது போன்ற கோரிக்கையை வைத்து மக்கள் இராணுவத்தினருக்கு எதிராக கோஷங்களை எழுப்பினார்கள். இதனையடுத்து தளத்திற்கு சென்ற கண்காணிப்புக் குழுவினர் மக்களிடம் விசாரணை மேற்கொண்டனர். இது குறித்து போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவினரை நேற்றுமாலை சந்தித்த வவுனியா மாவட்ட அரசியல் துறை பொறுப்பாளர் ஞானவேல் இதற்கு கடுமையான ஆட்சேபனையினை தெரிவித்துள்ளார். (ச)

### விவசாயக்...

அதியுயர் பாதுகாப்பு வலயத்திலுள்ள விவசாயக் காணிகளுக்கு பதிலாக மாற்று காணிகளை வழங்க நடவடிக்கை எடுத்து வருவதாக அரச சிரேஷ்ட சட்டத்தரணி எஸ்.ராஜரட்ண தெரிவித்தார்.

இதனைச் செயற்படுத்த ஒத்துழைப்பு வழங்குமாறும் அது தொடர்பான அறிக்கையொன்றை யூலை மாதம் 18 ஆம் திகதி நீதிமன்றத்திற்கு சமர்ப்பிக்குமாறும் உயர் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது. (ச-08)


நிறைஞ்சனாஸ் [சங்கானை]
[24.03.2005 முதல்]
சிம்பு,ரேவதி,ஜோதிகா நடித்த
மன்மதன்
கா.நேரம்:-11.00, 2.45, 6.00(பி.நே)

நாதன்ஸ் சினிமா
யாழ்ப்பாணம் [ஆஸ்பத்திரிக்கு முன்பாக]
இன்று மட்டும் 24.03.2005
குளிரூட்டப்பட்டது
THE PASSION OF THE CHRIST
காட்சி நேரம் 10.30, 2.30, 6.30, 9.30. (பி.நே)
நெறஞ்ச மனசு

ராஜா யாழ்ப்பாணம்
12/03/05 தொடக்கம்
இந்தியாவிலும் இலங்கையிலும் ஒரேதின வெளியீடு
பிரசாந், வடிவேலு அங்கிதா நடித்த
லண்டன்





ரிக்கற்றுக்களை முன்பதிவு செய்து கொள்ளுங்கள். (பி.நே. 10.30, 2.30, 6.30, 9.30)


இப் பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல. 15 வெள்ளாந்தெரு, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 24.03.2005 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.